வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ஈழநாடு



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
MoneyGram. money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேன் யூனியன் பணப்பரிமாற்றம்
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 10.01.2025 வெள்ளிக்கிழமை இதழ் : 10 பக்கங்கள் : 12

# தொல்பொருள் திணைக்களமும் அரிசி விலை உயர்வுக்கு காரணம்

## சபையில் சுட்டிக்காட்டினார் குகதாசன் எம்.பி.



கொழும்பு, ஜன. 10

நாட்டில் ஏற்பட்டுள்ள அரிசி விலை உயர்வுக்கு இயற்கை பேரிடர்கள் மட்டுமின்றி அரசினது அங்கங்களான பல்வேறு திணைக்களங்களில் தொல்பொருள்துறையும் முக்கிய காரணமாக உள்ளது என திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அரசு இந்த விடயத்தில் கவனம் செலுத்தி விவசாய நிலங்களை மக்களிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தொல்பொருள் துறையானது தமிழ் மக்கள் சில நூற்றாண்டு காலமாக விவசாயம் செய்து வருகின்ற விவசாய நிலங்களை தமது தொல்பொருள் இடங்களாக அறிவித்து கையகப்படுத்தி வருகின்றது.

எடுத்துக்காட்டாக, இந்த ஆண்டு தொடங்கி பத்து நாட்கள் கூட முடிவடையாத நிலையில், தொல்லியல் துறையானது கடந்த 6ஆம் திகதி மாலை

11

# மலையக மக்களுக்காக குரல் எழுப்பிய சிறீதரன்

கொழும்பு, ஜன. 10

இந்த அரசாங்கத்திலாவது மலையக மக்களுக்குச் சொந்த நிலம் மற்றும் வீடு அமைத்துக்கொடுக்கப்பட்டால் வரலாற்றில் சாதனை புரிந்த அரசாக மாறக்கூடும் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று வியாழக்கிழமை கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறினார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர், மலையக மக்களின் அடிப்படைச் சம்பள

11

## கோப் தலைவராக நிஷாந்த சமரவீர

கொழும்பு, ஜன. 10

பொது நிறுவனங்கள் பற்றிய குழு அல்லது கோப் குழுவின் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் நிஷாந்த சமரவீர ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

பொது நிறுவனங்கள் பற்றிய குழு நேற்று வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு பாராளுமன்றத்தில் கூடியபோதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது. (அ)

# எச்.எம்.பி.வி. நோயாளிகள் எவரும் இதுவரை கண்டறியப்படவில்லை!

## சுகாதார அமைச்சர் உறுதி

கொழும்பு, ஜன. 10

இலங்கையில் எச்.எம்.பி.வி நோயாளிகள் எவரும் இதுவரை கண்டறியப்படவில்லை என சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

எச்.எம்.பி.வி வைரஸ் தொற்று தொடர்பில் சுகாதார அமைச்சு விழிப்புடன் இருப்பதாகவும், நாட்டில் வைரஸால் பாதிக்கப்பட்ட எவரேனும் கண்டறியப்பட்டால் மக்களுக்குத் தெரியப்படுத்த அரசாங்கம் கடமைப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் ஆளுங்கட்சி எம்.பி. நிஷாந்த சமரசிங்க, எழுப்பிய கேள்விக்கு பதில்

11

# மீளக்குடியேறிய மக்களுக்கு சரியாக உதவிகள் வழங்காத கடந்த அரசுகள்!

## சபையில் சாடினார் சிறீதரன் எம்.பி.

கொழும்பு, ஜன. 10

மீளக்குடியேறிய மக்களுக்காக வழங்கப்படுகின்ற உதவிகள் என்பது கடந்த கால அரசுகளில் சரியான முறையில் மேற்கொள்ளப்படவில்லை என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று வியாழக்கிழமை கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நலன்புரி நடவடிக்கைகள் மீள் பரிசீலனை செய்யப்பட வேண்டும். நலன்புரி தேவைப்படுவோருக்கு இன்றி வசதி படைத்தோருக்கு நலன்புரி சென்றடைந்ததை காணமுடிகின்றது. தேவையுடையோர் பயனடைய

11

# எமக்கும் ரணிலுக்கும் வித்தியாசம் உள்ளது!

## சபையில் கூறினார் சுனில் ஹந்துன்நெத்தி

கொழும்பு, ஜன. 10

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கைகளை சம கால அரசாங்கம் பின்பற்றுவதாக மக்கள் மத்தியில் போலிப் பிரசாரங்களை எதிர்க்கட்சிகள் முன்னெடுத்துள்ளன. எமது அரசாங்கம் அமையப்பெற்று நூறு நாட்களை எட்டியுள்ள சூழல் எந்தவொரு நபர் மீது ஊழல்-மோசடி குற்றச்சாட்டுகள் சுமத்தப்படவில்லை. அதன் ஊடாகவே எமக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் வித்தியாசம் இருப்பதை புரிந்துக்கொள்ள முடியும் என அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

11




# ரோஹிங்கியா ஏதிலிகளை நாடு கடத்த வேண்டாம்!

## வலியுறுத்தி முல்லைத்தீவில் போராட்டம்!

முல்லைத்தீவு, ஜன. 10

இலங்கையில் தஞ்சமடைந்த ரோஹிங்கியா ஏதிலிகளை நாடு கடத்த வேண்டாம் என வலியுறுத்தி முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் நேற்று இந்த கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பாதைகளைத் தாங்கியவாறு அமைதியான முறையில் இந்த கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

ரோகிங்கியா ஏதிலிகளை நாடு கடத்த வேண்டாம் எனவும், சர்வதேச மனித உரிமைச் சட்டங்களைப் பாதுகாக்கவேண்டும் எனவும் போராட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்தனர். (அ)

# அரசாங்க பணியாளர்களின் நடத்தையில் மாற்றம் தேவை

## வலியுறுத்துகிறார் வடக்கு ஆளுநர்

வடமராட்சி, ஜன. 9

அரசாங்க பணியாளர்களின் நடத்தைகளில் மாற்றத்தை ஏற்படுத்துவதன் ஊடாக மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

'கிளீன் சிறிலங்கா' திட்டம் தொடர்பில் வடக்கு மாகாண அலுவலர்களுக்கு தெளிவுபடுத்தும் நிகழ்வு வடக்கு மாகாண பிரதம செயலர் அலுவலக கேட்போர் கூடத்தில் நேற்று வியாழக் கிழமை காலை இடம்பெற்றது.

11

# மண்ணெண்ணெய் அருந்திய ஒரு வயது குழந்தை உயிரிழப்பு!

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஜன. 10

யாழ்ப்பாணம் - கோப்பாய் பகுதியில் ஒரு வயது இரண்டு மாதங்கள் நிரம்பிய ஆண் குழந்தை ஒன்று மண்ணெண்ணெய் குடித்த நிலையில் நேற்று உயிரிழந்துள்ளது. இதன்போது கோப்பாய் மத்தி, கோப்பாய் பகுதியைச் சேர்ந்த தர்சிகன் சஸ்வின் என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

11

# உள்ளூராட்சி தேர்தல் திருத்த சட்டமூலத்தில் குறைபாடுகள்

## ரவூப் ஹக்கீம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன. 10

உள்ளூராட்சி மன்ற தேர்தல் திருத்த சட்டமூலத்தில் குறைபாடுகள் உள்ளதாக எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

பாராளுமன்றம் சபாநாயகர் கலாநிதி ஜகத் விக்ரமரத்ன தலைமையில் நேற்று கூடியது. இதன் போது உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் வெளிநாட்டு முதலீடுகளை உள்ளீர்க்க விஜித ஹேரத்துடன் யாழ். எம்.பிக்கள் சந்திப்பு

கொழும்பு, ஜன. 10

வெளிநாட்டில் வாழுகின்ற தமிழர்கள் வடக்கில் முதலீடு செய்வது தொடர்பாக தமது ஆர்வத்தை வெளிப்படுத்தி வருகின்றனர். இது தொடர்பாக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி, வைத்தியர் பவானந்தராஜா ஆகியோர் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்துடன் கலந்துரையாடல் ஒன்றை நேற்று முன்தினம் பாராளுமன்ற அலுவலகத்தில் நடத்தியுள்ளனர்.

இதன்போது வடக்கு மாகாணத்தில் ஐந்து தொழிற்பேட்டை நிலையங்களை அமைப்பதற்காக காணிகள் இனங்காணப்பட்டுள்ளதாகவும் விரைவில் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இலங்கை முதலீட்டு சபையின் ஊடாக தங்கள் செயற்திட்டங்களை முன்வைக்க முடியும் எனவும் அமைச்சர் கூறினார்.

அதே போன்று நீண்ட காலமாக புலம்பெயர்ந்து நாட்டுக்கு வர முடியாது இருக்கும் தமிழர்கள் தாங்கள் நாட்டுக்கு வர விரும்புவது தொடர்பான ஆர்வத்தை பாராளுமன்ற உறுப்பினர் றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி அமைச்சருக்கு தெரியப்படுத்தினார். (அ)



# அரசியல் கைதிகள் விடுதலை கோரி கொடிகாமத்தில் நேற்று கையெழுத்து

யாழ்ப்பாணம், ஜன. 10

பல வருடங்களாக விசாரணை என்னும் பெயரில் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரி முன்னெடுக்கப்பட்டுவரும் கையெழுத்துப் போராட்டம் நேற்று கொடிகாமம் பஸ் தரிப்பிடத்துக்கு முன்பாக இடம்பெற்றது.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளையும், புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்ட பின்னர் நீதி மன்றத்தினால் விடுதலை செய்யப்பட்ட பின்பும் மீண்டும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள போராளிகளையும், புதிய அரசாங்கம் விடுவிக்கவேண்டும் என வலியுறுத்தி கையெழுத்துப் போராட்டம் இடம்பெற்றது.

இந்த கையெழுத்துப் போராட்டத்திற்கு கொடிகாமம் பகுதி மக்கள் மிகுந்த ஆர்வத்துடன் ஆதரவளித்து கைழுத்துக்களை வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# விவசாயிகளுக்கு ரூ. 25,000 உர மானியம் இரண்டு கட்டங்களாக வழங்கப்படுகிறது

கொழும்பு, ஜன. 10

பெரும்போகத்திற்காக உர மானியமாக 25,000 ரூபா மற்றும் இலவச சிவப்பு தூள் உரத்தை விவசாயிகளுக்கு வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

விவசாயிகளுக்கு உர மானியங்களை வழங்கும் அரசாங்கத்தின் திட்டம் தொடர்பாக பாராளுமன்ற விவாதத்தின் போது எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே பிரதமர் இவ்வாறு கூறினார்.

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் உர மானியம் வழங்கப்பட வேண்டிய காலம் 2024ஆம் ஆண்டு ஒக்ரோபர் 01 திகதி முதல் 2025 ஆம் ஆண்டு பெப்ரவரி முதலாம் திகதி வரையாகும்.

ரூ.25,000 உர மானியம் இரண்டு கட்டங்களாக ரூ.15,000 மற்றும் ரூ.10,000 என வழங்கப்படும். முதல் தவணையாக ரூ.15,000 ஏற்கனவே செலுத்தப்பட்டுள்ளது. விவசாயிகளின் உரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய ஒரு நேர்மறையான மற்றும் முறையான அமைப்பைச் செயல்படுத்த அரசாங்கம் செயல்பட்டு வருகிறது. இதற்காக விவசாய அமைப்புகளிடமிருந்து தற்போது யோசனைகள் கோரப்பட்டு வருகின்றன.

நெல் நிலங்களில் நெல் பயிரிடும் விவசாயிகளுக்கு வழங்கப்படும் நிதி உதவிக்கு கூடுதலாக, அரசாங்கம் தற்போது 25239.73 மெற்றிக் தொன் சிவப்புத் தூள் உரத்தை இலவசமாக வழங்க திட்டமிட்டுள்ளது." என்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார். (அ)

# நாகை மீனவர்கள் 12 பேரும் நிபந்தனையுடன் விடுதலை!

யாழ்ப்பாணம், ஜன. 10

எல்லை தாண்டி இலங்கை கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்ட நாகை மாவட்ட மீனவர்கள் பன்னிருவரும் நிபந்தனை அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்

எல்லை தாண்டி,தடை செய்யப்பட்ட இழுவைப் படகை பயன்படுத்தி கடந்த வருடம் நவம்பர் 11ஆம் திகதி பருத்தித்துறை கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டபோது கடற்படையினரால் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யும் நடவடிக்கையின்போது கடற்படை உத்தியோகத்தர்களைத் தாக்கிக் கடமைக்கு இடையூறு விளைவித்தமை, கடற்படை படகைச் சேதப்படுத்தியமை, எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பன்னிரு இந்திய மீனவர்களும் பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

இதன்போது வழக்கை விசாரித்த நீதவான் கிருசாந்தன் பொன்னுத்துரை, கடந்த நவம்பர் 27ஆம் திகதி எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் வழக்கில் நிபந்தனையுடன் விடுவித்து உத்தரவிட்டிருந்தார்.

ஆனாலும் கடற்படை உத்தியோகத்தர்களைத் தாக்கியமை தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் தாக்கல் செய்த வழக்கில் மீனவர்கள் பன்னிருவரும் நேற்று முன்தினம் வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த வழக்கு மீண்டும் நேற்று முன் தினம் பருத்தித்துறை நீதிமன்றில் நீதவான் கிருசாந்தன் பொன்னுத்துரை முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது வழக்கை விசாரித்த நீதவான் இந்திய மீனவர்களுக்கு கடூழியச் சிறை என்ற நிபந்தனையுடன் பத்து வருடங்களுக்கு ஒத்திவைத்து விடுவித்து உத்தரவிட்டதுடன் படகு அரசுடமையாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)


# கைதடி சிறுவர் பொறுப்பேற்கும் இல்லத்தை பார்வையிட்ட வடக்கு ஆளுநர் வேதநாயகன்!

யாழ்ப்பாணம், ஜன. 10

வடக்கு மாகாண நன்னடத்தை சிறுவர் பராமரிப்புத் திணைக்களத்தின் கீழ் இயங்கும், கைதடி அரச சிறுவர் பொறுப்பேற்கும் இல்லத்தை வடக்கு மாகாண ஆளு நர் நா. வேதநாயகன் அவர்கள் நேற்று வியாழக்கிழமை பார்வை யிட்டார்.

வடக்கு மாகாண நன்ன டத்தை சிறுவர் பராமரிப்புத் திணைக்களத்தின் ஆணையாளர் திருமதி சுஜீவா சிவதாஸ், இல்லத்தின் தேவைப்பாடுகள் தொடர்பில் ஆளுநருக்குத் தெரியப்படுத்தினார்.

தேவைப்படுகள் குறித்து நடவடிக்கை எடுப்பதாக ஆளுநர் தெரிவித்தார். (அ-05)



# வாகன விலைகள் மாறும் சாத்தியம்

கொழும்பு, ஜன. 10

வாகன இறக்குமதிக்கான தற்போதைய வரி வரம்புகள் மாற்றப்பட்டால், சந்தையில் வாகனங்களின் விற்பனை விலைகளும் பாதிக்கப்படும் என்று வாகன இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போதுள்ள வரி விகிதங்களின் கீழ் வாகன இறக்குமதி மீண்டும் தொடங்கியவுடன் மதிப்பிடப்பட்ட விலைகளைக் கணக்கிட முடியும் என்று வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இருப்பினும், அரசாங்கம் வரி விகிதங்களை அதிகரித்தால், வாகன விலைகளும் தானாகவே உயரும் என்றும், வரி விகிதங்களைக் குறைப்பது விலைகளைக் குறைக்க வழி வகுக்கும் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

தற்போது, உள்ளூர் சந்தையில் ஒரு ஜப்பானிய காருக்கு விதிக்கப்படும் வரித் தொகை அதன் உற்பத்தி விலையில் தோராயமாக 300 வீதம் ஆகும்.

இறக்குமதி கட்டுப்பாடுகள் காரணமாக விநியோகம் குறைவதால் ஏற்படும் பயன்படுத்தப்பட்ட வாகனங்களின் விலைகளில் ஏற்படும் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு, வாகன இறக்குமதி மீண்டும் தொடங்குவதன் மூலம் இயல்பு நிலைக்குத் திரும்பும் என்று சங்கம் நம்பிக்கை தெரிவித்தது.

(அ)

# சுகாதார அமைச்சுக்குள் பெரும் அரசியல் தலையீடு

## கடும் நடவடிக்கைக்கு தயாராகும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம்

கொழும்பு, ஜன. 10

சுகாதார அமைச்சின் நிர்வாக செயற்பாட்டில் பாரிய அரசியல் தாக்கங்கள் காணப்படுவதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதனை உடனடியாகச் சீர்செய்ய சுகாதார அமைச்சர் நடவடிக்கை எடுக்காவிட்டால், கடும் நடவடிக்கை எடுக்கத் தயார் என சங்கத்தின் செயலாளர் வைத்தியர் பிரபாத் சுகததாச விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்தாவது-

சமீப காலமாக, பல்வேறு தரப்பினரால் சட்டவிரோதமான முறையில் மருத்துவப் பரிமாற்றச் செயல்பாட்டில் தேவையற்ற செல்வாக்கு மற்றும் தலையீடுகளின் பாதகமான போக்கு காணப்படுகின்றது.

சுகாதார அமைச்சின் சில அதிகாரிகள் தற்போது நடைமுறையில் உள்ள சட்ட முறைமைகளை மீறிச் செயற்படும் முயற்சியினால் 2025 ஆம் ஆண்டுக்கான வருடாந்த இடமாற்றப் பட்டியலை வெளியிடுவதில் பல மாதங்களாக தாமதம் ஏற்பட்டுள்ளது.

அநீதி இழைக்கப்பட்ட வைத்தியர்களின் எண்ணிக்கை 5000க்கும் மேலாகும்.

வைத்தியர்களின் தற்காலிகப் பணியிடங்கள் இடமாற்ற சபையின் ஒப்புதலுக்கு உட்பட்டதாக இருக்கவேண்டும். இதன் மூலம் செயற்பாட்டில் நேர்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் துல்லியத்தை உறுதி செய்ய வேண்டும்.

இதேவேளை, நிபுணத்துவ வைத்தியர்களின் இடமாற்றம் தொடர்பில் முன்னெப்போதும் இல்லாத வகையில் இடையூறுகள் ஏற்பட்டுள்ளமை அண்மைக் கால நிகழ்வுகளின் ஊடாக அவதானிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சிலும் சுகாதாரத்துறையிலும் அரசியல் சார்புகளும் நிகழ்ச்சி நிரல்களும் முதன்மை பெறுகின்ற சூழ்நிலையில், கடந்த காலத்தில் கட்டியெழுப்பப்பட்ட நம்பிக்கையான சூழலுக்கு சேதம் விளைவித்து சுகாதார அமைப்பை மீண்டும் நெருக்கடிக்கு கொண்டு செல்வதற்கான பின்னணி தயாராகி வருகிறது. இதன் மூலம் அப்பாவி நோயாளிகளின் உயிருக்கு ஆபத்து ஏற்படும்.

இந்நாட்டு மக்களின் வாழ்வுரிமையைப் பாதுகாப்பது ஜனாதிபதி, சுகாதார அமைச்சர் மற்றும் ஏனைய பொறுப்புள்ள நபர்களின் தவிர்க்க முடியாத பொறுப்பாகும் - என்றுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu — ඊළනාඩු
10.01.2025 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், மார்கழி 26

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 205 2300**

## அமெரிக்காவால் என்ன செய்ய முடியும்?

அமெரிக்க தூதுவரை இலங்கை தமிழ் அரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்திருக்கின்றனர். இதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. மக்களின் பிரதிநிதிகள் கோரினால் வெளிநாட்டு தூதுவர்கள் அதற்கான திகதியை கொடுப்பார்கள். தற்போதைய அமெரிக்க தூதுவர் ஜூலி சங் பல தடவைகள் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்தித்திருக்கின்றார்.

இதைவிடவும், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான கீழ்நிலைச் செயலர் விக்ரோறியா நூலண்ட் அம்மையார் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து, அமெரிக்காவின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியிருந்தார்.

அவர் தொடர்பில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எத்தனை பேர் அறிந்திருப்பார்கள் என்பதும் சந்தேகம்தான். ஏனெனில் ஒரு முக்கிய நாட்டின் இராஜதந்திரியை சந்திக்கச் செல்கின்றபோது, அந்த நாட்டின் அணுகுமுறை, சந்திக்கவுள்ள இராஜதந்திரியின் பின்னணி என்பவற்றை அறிந்து செல்லும் பழக்கம் இல்லாதவர்கள்தான் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள். ஆகக் குறைந்தது என்ன விடயங்களை நாங்கள் முன்வைக்கலாம் என்பவற்றைக் கூட தங்களுக்குள் உரையாட ாமல், தூதரக வாசலில் நின்றுகொண்டு என்ன பேசலாம் என்று சிந்திக்குமளவுக்குத்தான் தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் என்போரின் ஆற்றல் இருப்பதுண்டு.

நூலண்ட் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உயர் அதிகாரி. தெற்காசிய விவகாரங்கள் தொடர்பான அமெரிக்க கொள்கை சார் அணுகுமுறைகளில் தாக்கம் செலுத்தும் முக்கிய அதிகாரியாக இருந்தவர். உக்ரைனின் யுத்தம் தொடர்பில் தற்போது ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டிருக்கும் - அப்போது முன்னாள் ஜனாதிபதி, றொனால்ட் ட்ரம்ப் கூட, ஒரு முறை நூலண்டின் பெயரைக் குறிப்பிட்டு விமர்சித்திருந்தார்.

நூலண்டின் கணவர் அமெரிக்காவின் உலக தலைமைத்துவத்தை இலக்கு வைத்து செயல்படும் ஒரு முக்கிய வரலாற்றியலாளரும் வெளிவிவகாரக் கொள்கை நிபுணருமாவார். பின்லேடனின் செப்ரெம்பர் 11 தாக்குலைத் தொடர்ந்து, சதாம் ஹுசைனை அதிகாரத்திலிருந்து அகற்றுமாறு கூறி, அப்போது ஜனாதிபதியாக இருந்த ஜோர்ஜ் டபிள்யூ. புஷ்ஷுக்கு கடிதம் மூலம் வலியுறுத்தியவர். சதாம் ஹுசைனை அதிகாரத்தில் அனுமதிப்பதானது, பயங்கரவாதத்திடம் சரணடைவதற்குச் சமமானது என்று குறிப்பிட்டவர்.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் விக்ரோறியா நூலண்டை, உக்ரைன் யுத்தத்தோடு தொடர்புடுத்தி ட்ரம்ப் விமர்சித்திருந்தார். விக்ரோறியா 2023 ஜூலை தொடக்கம் பெப்ரவரி தொடக்கம் தற்காலிக அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலாளராகவும் இருந்தவர். தற்போது இராஜதந்திர பொறுப்புக்களிலிருந்து ஓய்வு பெற்றிருக்கின்றார். இவ்வாறான பின்னணியைக் கொண்டிருக்கும் விக்ரோறியா தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கு என்ன கூறிச் சென்றார்? கொஞ்சம் கொஞ்சமாக விடயங்களை செய்யப் பாருங்கள். ரணில் விக்கிரமசிங்கவோடு பேசுங்கள் - இதன் பின்னர் புதிய அரசியல் யாப்பில் சமஷ்டியை வலியுறுத்துமாறு ஜூலி சங்கிடம் கூறுவதால் என்ன பயன் ஏற்படும்?

ஜூலிக்கு முன்னர் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராக இருந்த அலைனா ரெப்லிஸ், புதிய அரசியல் யாப்பு என்பது இலங்கை மக்களால் தீர்மானிக்கப்படுவது, அது எவ்வாறு அமைய வேண்டுமென்று அமெரிக்கா கூறமுடியாது என்று, (டான் தொலைக்காட்சி நேர்காணலில்) யாழ்ப்பாணத்தில் வைத்து கூறியிருந்தார். அமெரிக்க இராஜதந்திரிகள் மிகவும் தெளிவாகவும் இலகுவான ஆங்கிலத்திலும் விடயங்களை கூறிய பின்னரும் கூட, சமஷ்டிக்கு அழுத்தம் கொடுங்கள் என்றால் அவர்களால் என்ன செய்ய முடியும்?

# சுண்ணாம்புக்கல் அகழ்வில் சட்டவிரோத செயல்பாடுகள் முடிவுறுத்தப்பட வேண்டும்

## ஆளுநரிடம் ஐங்கரநேசன் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.10

யாழ்ப்பாணக் குடாநாடு கடலாலும், கடல் நீரேரிகளாலும் சூழப்பட்ட ஒரு தீபகற்பம். பூமி வெப்பமடைவதன் விளைவாக ஏற்பட்டு வரும் கடல்மட்ட உயர்வு குடாநாட்டைப் பெருமளவு பாதிக்கும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கட்டுப்பாடற்ற சட்டவிரோத சுண்ணாம்புக்கல் அகழ்வு காலநிலை மாற்றத்தால் ஏற்படவுள்ள பாதகங்களை மேலும் விரைவுபடுத்தும் - அதிகப்படுத்தும். இவற்றைக் கருத்தில்கொண்டு விவசாய நடவடிக்கையைப் பாதிக்காத வகையில் சுண்ணாம்புக்கல் அகழ்வை நெறிப்படுத்துவதோடு, இதில் நிலவக்கூடிய சட்டவிரோதச் செயல்பாடுகள் அனைத்தும் உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

சட்டவிரோத சுண்ணக்கல் அகழ்வை முடிவுறுத்தக்கோரி வடமாகாண ஆளுநரிடம் முன்னாள் அமைச்சர் ஐங்கரநேசனால் நேற்று வியாழக்கிழமை மனுவொன்று கையளிக்கப்பட்டது.இதன் பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். (எ-05)

# ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளராக நிசாந்தன் கடமையை பொறுப்பேற்றார்

முல்லைத்தீவு,ஜன.10

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளராக ரட்ணகுமார் நிசாந்தன் நேற்றுக்காலை தனது கடமைகளை பொறுப்பேற்றுள்ளார்.

யாழ்ப்பாணம் கமநல சேவைகள் திணைக்களத்தில் பிரதி ஆணையாளராக பணியாற்றிய இவர் ஜனாதிபதி செயலகத்தில் உலக உணவுத் திட்ட பணிப்பாளராக பணியாற்றினார். இந்த நிலையில், ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளராக ர. நிசாந்தன் கடமைகளை பொறுப்பேற்றுள்ளார். (எ-05)



# வவுனியாவில் மரக்கடத்தல் முறியடிப்பு

வவுனியா, ஜன.10

வவுனியா மரக்காரம்பளையில் மரக்கடத்தல் ஒன்றை முறியடித்துள்ளதாக நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

மரக்காரம்பளை பகுதியில் சந்தேகத்துக்கு இடமாக மரங்களை ஏற்றிச்சென்ற ஜீப் ரக வாகனத்தை நெளுக்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திவுல்வெவ தலைமையிலான போக்குவரத்து பொலிஸார் சோதனை செய்த போது சுமார் இரண்டு இலட்சம் ரூபாய் பெறுமதியான 72 தீராந்திகள் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டன.

அத்துடன் மரக்கடத்தலுக்கு பயன்படுத்திய ஜீப் ரக வாகனமும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டதுடன், சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார்.


இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நெளுக்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-10)

# யாழில் 'நூறு மின்னல்கள்' நூல் அறிமுக விழா



மாயனின் 'நூறு மின்னல்கள்' நூல் அறிமுக விழா யாழ்ப்பாணம், டேவிட் வீதியில் அமைந்துள்ள கலைத்தூது அழகியல் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. (எ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி - 07 வெள்ளிக்கிழமை
குரோதி வருடம் - மார்கழி 25
நல்ல நேரம்:10.30 -12.00
ராகு காலம்:1.30 -3.00
திதி :ஏகாதசி




**மேடம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்ற போராட வேண்டியிருக்கும். பொறுமைத் தேவைப்படும் நாள்.

**இடபம்**
அனாவசிய செலவுகளை குறைக்கப்பாருங்கள். திடீர் பயணங்கள் இருக்கும். குடும்பத்தில் சின்ன வாக்குவாதங்கள் வந்து நீங்கும். சகோதர வகையில் அலைச்சல் உண்டு . ஆதாயம் தரும் நாள்.

**மிதுனம்**
எதார்த்தமாக பேசிக் கவர்வீர்கள். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற் றுவீர்கள். பழைய கடனில் ஒரு பகுதியை பைசல் செய்வீர்கள். பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள்.

**கடகம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உறவினர் நண்பர்கள் எதிர்பார்ப்புடன் பேசு வார்கள். சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப் புகளை ஒப்படைப் பார்கள்.

**சிம்மம்**
கணவன்- மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர் கள். புது முடிவுகள் எடுப்பீர்கள். புதியவர்கள் நண்பர்களாவார்கள். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். உடல் நிலை சீராகும்.

**கன்னி**
சந்திராஷ்டமம் இருப் பதால் ஒரு விஷயத்தை நினைத்து அதிகளவில் குழப்பமடைவீர்கள். உற வினர்கள் நண்பர்கள் விஷயத்தில் அத்துமீறி தலையிட வேண்டாம்.

**துலாம்**
சகோதர வகையில் நன்மை உண்டு. விலை உயர்ந்த ஆபரணம் வாங்குவீர்கள். மனைவி வழியில் மதிக்கப்படுவீர்கள். வேற்றுமதத்தவர் உதவுவார். எதிர்பாராத சந்திப்பு நிகழும்.

**விருச்சிகம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற் றுவீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறி முகமாவார்கள். நெருங் கியவர்களுக்காக மற்ற வர்களின் உதவியை நாடுவீர்கள்.

**தனுசு**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். பிள்ளைகளின் தனித்திறமைகளை கண்டறி வீர்கள். சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். நட்பு வட்டம் விரியும்.

**மகரம்**
கடந்த கால இனிய அனுபவங்களை நினை வுக்கூர்ந்து மகிழ்வீர்கள். தாய்வழி உறவினர் களால் அலைச்சல் ஏற்படும். பணப் பற்றாக் குறையை சமாளிப்பீர்கள்.

**கும்பம்**
குடும்பத்தில் உள்ள வர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. உறவினர்கள் வீடு தேடி வருவார்கள்.

**மீனம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். சில வேலைகளை விட்டுக் கொடுத்து முடிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிப்பு கூடும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள்.

# கல்விச் சான்றிதழை உறுதிப்படுத்த தவறிய கிராம உத்தியோகத்தர் பணி இடைநிறுத்தம்

வவுனியா, ஜன.10

வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடமையாற்றிய கிராம உத்தியோகத்தர் ஒருவர் தனது கல்விச் சான்றிதழை உறுதிப்படுத்த தவறியமையால் சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

கடந்த 2018 ஆம் ஆண்டு கிராம உத்தியோகத்தராக நியமனம் பெற்ற ஒருவர் தனது மூன்று வருட நிறைவில் பதவியை உறுதிப்படுத்த வேண்டும். குறித்த பதவியை மூன்று வருடம் கடந்தும் தாமதமாக கடந்த வருடமே குறித்த கிராம உத்தியோகத்தர் உறுதிப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதன்போது, குறித்த கிராம உத்தியோகத்தர் நியமனத்துக்காக சமர்ப்பித்த க. பொ. த. சாதாரண தரம் மற்றும் உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றை பரீட்சை திணைக்களத்தால் உறுதிப்படுத்த முடியவில்லை.

இதனையடுத்து குறித்த கிராம உத்தியோகத்தர் சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார். (எ- 10)

# மரக்கறிகளை குளத்து நீரில் கழுவி விற்பனை செய்யும் வியாபாரிகள்

வவுனியா, ஜன. 10

வவுனியா, இலுப்பையடி பகுதியில் உள்ள மொத்த மரக்கறி விற்பனை நிலையங்களுக்கு வரும் சில மரக்கறிகள், கழிவுகள் நிறைந்த வவுனியா குளத்து நீரில் கழுவிய பின்னர் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

குறிப்பாக கரட் போன்ற மரக்கறிகளை கொள்வனவு செய்யும் மொத்த வியாபாரிகள் அதனை தமது கடைகளின் பின்னுள்ள கழிவுகள் வீசப்படும் வவுனியா குளத்தில் கழுவிய பின் விற்பனை செய்து வருகின்றனர்.

இது தொடர்பில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு அறிவிக்கப்பட்ட போது அவர்கள் சம்பவ இடத்துக்கு வருகை தந்து வியாபாரி ஒருவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்த போதும், தற்போதும் சில வியாபாரிகள் வவுனியா குளத்தில் கழுவிய பின்னரே மரக்கறிகளை விற்பனை செய்து வருகின்றனர்.

வவுனியா குளமானது நகரில் அமைந்துள்ளதால் பல வர்த்தக நிலையங்களின் கழிவுகள் மற்றும் குப்பை கூலங்கள் என்பன அதில் வீசப்பட்டு வருகின்றது. இந்த நிலையில், குறித்த நீரில் மரக்கறிகளை கழுவி விற்பனை செய்வது தொடர்பில் நகர சபை கவனம் செலுத்த வேண்டும் என்பதுடன் அவர்களது உரிமத்தை இரத்துச் செய்ய வேண்டும் எனவும் நுகர்வோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-10)

# தரமற்ற, தடைசெய்யப்பட்ட வலைகளை மீனவர்களுக்கு வழங்கிய அதிகாரிகள்!

## பிரதேச செயலகம் தனியாக அதிக வரியும் விதிப்பு

வடமராட்சி, ஜன.10

தடைசெய்யப்பட்ட, தரமற்ற வலைகளை வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகம் கொள்வனவு செய்து அதிக வரி விதித்ததாக கூறி உடுத்துறை மீனவர்கள், மீன்பிடி வலைகளை திருப்பி கையளிக்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

உடுத்துறை கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கத்தை சேர்ந்த 41 பயனாளிகளுக்கு 8 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வலை கொள்வனவு செய்ய ஒதுக்கப்பட்டது

இந்த நிதி ஒதுக்கீட்டிலிருந்து வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகம் ஊடாக மீன்பிடி வலைகள் கொள்வனவு செய்யப்பட்டு பயனாளிகளிடம் வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போது, பயனாளிகளால் வலைகள் தரமற்றவை எனக் கூறி நிராகரிக்கப்பட்டுள்ளது.


இது தொடர்பில் கருத்து தெரிவித்த உடுத்துறை கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கத் தலைவர் கிட்டு, "வலையில் தங்கூசி கலந்திருப்பதால் இது பயன்பாட்டுக்கு உகந்தது இல்லை. இது ஒரு தடை செய்யப்பட்ட மீன்பிடி வலையாகும்.

உரிய தரம் கொண்ட கப்பல் பீஸ் எனப்படும் முழு வலையின் பெறுமதி 16, 400 ரூபாயாகும். குறித்த வலையை மட்டுமே கொள்வனவு செய்யுமாறு பிரதேச செயலகத்திடம் தெரிவித் திருந்தோம். ஆனால், அவர்கள் அதைச் செய்யவில்லை. தரமற்ற, பாவனைக்கு உதவாத வலையை தந்துள்ளனர்.

வலையில் தங்கூசி கலந்திருப்பதால் பயனாளிகள் வலை வேண்டாமென கூறியுள்ளனர். மேலும்,வலைக்கு 18 வீதம் தனியாக வரி விதிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தின் இந்த செயல்பாட்டை ஓர் ஊழலாகவே நாங்கள் பார்க்கின்றோம். எமக்கு வந்த அனைத்து வலைகளையும் திருப்பியனுப்புவதாகவும் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகம் நாங்கள் கூறிய தரம் கொண்ட வலைகளை கொள்வனவு செய்து வழங்க வேண்டும்"- என்றார். (எ-02)

# இளைஞர் மற்றும் பெண்கள் வலுவூட்டல் திட்டம் ஆரம்பம்



யாழ்ப்பாணம், ஜன.10

யு. என். எவ். பி. ஏ. நிறுவனத்தின் செயல்திட்டத்தை யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நடைமுறைப்படுத்துவது தொடர்பான முன்னாயத்தக் கலந்துரையாடல் யாழ்ப்பாணம் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) க. சிறீமோகனன் தலைமையில் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தத் திட்டத்தின் மூலம் இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கான வலுவூட்டல் செயல்திட்டத்தை பரீட்சார்த்தமாக இரண்டு பிரதேச செயலக பிரிவுகளில் நடைமுறைப்படுத்துவது என குறித்த கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் உதவி மாவட்ட செயலாளர் உ. தர்சினி, அரச சார்பற்ற நிறுவனங்கள் மாவட்ட இணைப்பாளர் ந. தயாபரன், யு. என். எவ். பி. ஏ. நிறுவன திட்ட ஆய்வாளர் திருமதி யசாரா நதானியேல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# யாழில் விபத்து இளைஞன் பலி



யாழ்ப்பாணம்,ஜன.10

யாழ். நகர்ப்பகுதியிலிருந்து பருத்தித்துறை நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞன் ஒருவர் வல்லைப்பகுதியில் மாட்டுடன் மோதி விபத்தில் சிக்கியதில் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது.

பருத்தித்துறை புற்றாளை பகுதியைச் சேர்ந்த விஜயகுமார் மணிகண்டன் (வயது- 21) என்ற இளைஞனே உயிரிழந்தார். (எ- 02)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடுகளின் தூதுவர்களை அமைச்சர்கள் சந்திக்க தடை!

## குற்றம் சுமத்துகிறார் தயாசிறி

கொழும்பு, ஜன. 10

**வெளிவிவகார அமைச்சரின் அனுமதியின்றி அமைச்சர்கள் வெளிநாட்டு தூவர்களை சந்திப்பதற்கு தடை விதித்து ஜனாதி பதியின் செயலாளர் சுற்றறிக்கை வெளியிட்டதாக எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர பாராளௌமன்றத்தில் குற்றம் சுமத்தியுள்ளார்.**



இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-வெளி விவ கார அமைச்சரின் அனுமதியின்றி அமைச்சர்கள், செயலாளர்கள் மற்றும் ஆளுநர்கள் வெளிநாட் டுத் தூதரகங்களின் தூதுவர் களை சந்திப்பதைத் தடை செய்து ஜனாதிபதியின் செயலா ளர் சுற்றறிக்கை ஒன்றை வெளி யிட்டுள்ளார்.

அமைச்சர்களுக்கு ஏன் இந்தக் கட்டுப்பாடுகள் விதிக் கப்படுகின்றன என்று நாம் ஆச் சரியப்படுகிறோம். இது வட கொரிய ஆட்சி பாணியிலான நடவடிக்கையாகும்-என்றார்.

எனினும் அதனை நிராக ரித்த சபைத் தலைவர் பிமல் ரத்நாயக்க-சிறிது நேரத்திற்கு முன்பு நான் ஆஸ்திரேலிய தூ துவரைச் சந்தித்தேன். நான் அவரை உங்களுக்கு அறிமுகப் படுத்த முடியும்-என்று குறிப் பிட்டார். (அ)

# பாரிய மோசடிகளில் அரச முக்கியஸ்தர்கள்

## அம்பலப்படுத்துவோம் என்கிறார் பெரமுனவின் காமினி லொக்குகே

கொழும்பு, ஜன. 10

அரசாங்கத்தின் முக்கியஸ்தர் கள் பாரிய மோசடிகளுடன் தொடர்புபட்டிருப்பதாக பொதுஜன பெரமுன குற்றம் சுமத்தியுள்ளது.

இந்த குற்றச்சாட்டை பொதுஜன முன்னணியின் சிரேஸ்ட உறுப்பினரும் முன் னாள் அமைச்சருமான காமினி லொக்குகே முன்வைத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்- அரசாங்கத்தின் முக்கிய பதவிகளை வகிக்கும் நபர்களின் பெயர்கள் இந்த ஆவணத்தில் காணப்படுகின்றன.

இந்த நபர்கள் குறித்து எதிர்வரும் வாரத்தில் நாம் அம்பலப்படுத்த உள்ளோம்.

அரசாங்கத்தில் முக்கிய பத விகளை வகிக்கும் நபர்களின் சொத்துக்கள் தொடர்பில் நாட்டு மக்களுக்கு தாம் அம்ப லப்படுத்துவோம்.

இந்த தகவல்கள் வெளியிட் டதன் பின்னர் அரசாங்கம் குறித்த நபர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கும் என எதிர்பார்க்கிறோம்-என்றார். (அ)

# அரிசி இறக்குமதியில் மோசடி நடந்துள்ளது!

## மகிந்த அமரவீர குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 10

அரிசி இறக்குமதியில் பல கோடி ரூபா மோசடி செய்யப் பட்டுள்ளது என முன்னாள் விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

நாடு மற்றும் பச்சை அரிசி வகைகளை இறக்குமதி செய்யும் போர்வையில் பெருமளவில் பாஸ்மதி அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது என அவர் சுட்டிக்காட்டினார்.

அரசாங்கத்தின் முக்கியஸ்தர் களுக்கு தெரிந்தே இந்த மோசடி இடம்பெறுகின்றது என்பது குறித்து சந்தேகம் எழுவதாக மகிந்த அமரவீர தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டி யது அவசியமானது எனவும் அவர் குறிப்பிட்டார்.


அரிசி இறக்குமதி தொடர் பில் ஏற்கனவே இவ்வாறான குற்றச்சாட்டுக்களை எதிர்க்கட் சிகள் சுமத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

### பாராளுமன்ற ஒன்றியத்தின்

# இணைத் தலைவர்களாக கிரிஷாந்த, சாணக்கியன்!

கொழும்பு, ஜன. 10

பத்தாவது பாராளுமன்றத் தில் மீண்டும் ஸ்தாபிக்கப்பட்ட திறந்த பாராளுமன்ற முன்னெ டுப்புக்கான பாராளுமன்ற ஒன் றியத்தின் முதலாவது கூட்டம் நேற்று முன் தினம் பாராளு மன்றத்தில் நடைபெற்றது.



இந்த ஒன்றியத்தின் இணைத் தலைவர்களாக அமைச்சர் பேராசிரியர் கிரிஷாந்த அபே சேன மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் ராஜ புத்திரன் இராசமாணிக்கம் ஆகி யோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இதன்போது ஒன்றியத்தின் இணைத் தலைவராக அமைச்சர் பேராசிரியர் கிரிஷாந்த அபே சேனவின் பெயரை, பாராளு மன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜனக சேனாரத்ன முன்மொழிந்ததுடன், பாராளு மன்ற உறுப்பினர் சட்டத்தரணி பாக்ய ஸ்ரீ ஹேரத் அதனை வழிமொழிந்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியனின் பெயரை எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேம தாஸ முன்மொழிந்ததுடன், அதனை பாராளுமன்ற உறுப் பினர் நளின் பண்டார வழி மொழிந்தார்.

அத்துடன், இந்த ஒன்றியத் தின் அமைப்பாளராக பாராளு மன்ற உறுப்பினர் ஜகத் மனு வர்ண தெரிவு செய்யப்பட் டதுடன், பிரதி இணைத் தலைவர் களாக பாராளுமன்ற உறுப்பி னர்களான சட்டத்தரணி சமிந்தி ராணி கிரிஎல்லே, சந்தன சூரிய ஆரச்சி, எஸ்.எம். மரிக்கார் மற்றும் சட்டத்தரணி துஷாரி ஜயசிங்ஹ ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (அ)

# புதிய அரசமைப்பு உருவாக்க எதிரணிகளும் ஒத்துழைக்கும்

## சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன நம்பிக்கை

கொழும்பு, ஜன. 10

புதிய அரசமைப்பை இயற் றுவதற்கு நாடாளுமன்றத்தால் வழங்கப்பட வேண்டிய முழுப் பங்களிப்பையும் வழங்குவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படு வோம். இதற்கு எதிரணிகளும் முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என நம்புகின்றோம் என்று சபாநாயகர் வைத்திய கலாநிதி ஜகத் விக்ரமரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங் களிடம் அவர் மேலும் குறிப்பி டுகையில்,நாட்டில் பலமான ஆளுங்கட்சி உள்ளது. எனவே, புதிய அரசமைப்பை இயற்று வதற்குரிய வேலைத்திட்டத்தை முன்னெடுத்து அதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தால், சட்டவாக்கச் சபையில் அதனை நிறைவேற் றிக்கொள்வதற்குரிய பங்க ளிப்பை வழங்குவதற்கு அர்ப் பணிப்புடன் செயற்படுவோம்.

புதிய அரசமைப்பு அவசி யம் என நாட்டு மக்களும் கரு துகின்றனர். இதற்குரிய மக்கள் ஆணையும் வழங்கப்பட்டுள் ளது.

எனவே, மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவ தற்குரிய பொறுப்பு உள்ளது.

இது தொடர்பிலும் அர்ப்பணிப்புடன் செயற்படு வோம். புதிய அரசமைப்பை இயற்றுவதற்கு எதிர்க்கட்சிகள் முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என நம்புகின்றோம்- என்றார். (அ)

# இறுதிச்சடங்குக்கு சென்று வீடு திரும்பிய தம்பதி விபத்தில் பலி!

கொழும்பு, ஜன. 10

மாத்தளையில் சம்பவித்த விபத்தில் தம்பதி ஒன்று உயிரி ழந்ததுடன், 3 வயது குழந்தை உட்பட இருவர் காயமடைந் துள்ளனர்.

பல்லேபொல, நாரங்கமுவ, மடவல உல்பத பகுதியில் நேற்று முன் தினம் குழு ஒன்றை ஏற்றிச் சென்ற ஓட்டோ வீதியை விட்டு விலகி 20 அடி பள்ளத்தில் விழுந்ததில் விபத்து ஏற்பட்டுள்ளது.

இறந்தவர்களும் காயம டைந்தவர்களும் ஒரே குடும்பத் தைச் சேர்ந்த உறவினர்கள் என தெரியவந்துள்ளது.

மாத்தளை, உக்குவெல பகு தியை சேர்ந்த 75 வயதான முக மது இப்ராஹிம் ரிஷாப்தீன் மற்றும் 65 வயதான அவரது மனைவி ரஷீனா உம்மா ஆகியோரே உயிரிழந்தனர்.

விபத்தில் இறந்தவரின் உற வினரான 3 வயது குழந்தை மற்றும் ஓட்டோச் சாரதி காயமடைந்து மருத்து வமனையில் அனுமதிக்கப்பட் டுள்ளதாக மஹாவெல பொலிஸார் தெரிவித்தனர்.

மில்லவான பகுதியில் இறு திச் சடங்கில் கலந்து கொண்ட குடும்பம் மீண்டும் வீடு திரும் பும் போது விபத்து ஏற்பட்டுள் ளது. (அ)

# உயர்நீதிமன்ற செயல்பாடு தற்காலிகமாக இடமாற்றம்

கொழும்பு, ஜன. 10

உயர்நீதிமன்ற வளாகக் கட் டடத்தின் புதுப்பித்தல் காரண மாக, எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் கொழும்பு 12 இல் அதி கார மாவத்தையில் அமைந் துள்ள புதிய எம்.சி.சி. கட்ட டத்துக்கு உயர் நீதிமன்றச் செயற்பாடுகள் தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்படவுள்ளன.

இதற்கிடையில், ஜனவரி 15 முதல் பழைய நீதி அமைச்சுக் கட்டடத்தில் அமைந்துள்ள புதிய மேல்முறையீட்டு நீதிமன் றத்தில், மேல்முறையீட்டு நீதி மன்றம் மீண்டும் அமர்வுகளை ஆரம்பிக்கும் என்றும் அறிவிக் கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், வாகன நிறுத்துமிடம் உள்ளிட்ட வரை யறுக்கப்பட்ட வசதிகள் தொடர்பாக பொதுமக்கள், சட்டத்தரணிகளுக்கு ஏற்படும் ஏதேனும் சிரமத்துக்கு உயர் நீதி மன்றத்தின் மார்ஷல்ஸ் அலுவ லகம் வருத்தம் தெரிவித்துள்ளது.

# அஹுங்கல்லவில் சூடு!

கொழும்பு, ஜன. 10

காலி - அஹுங்கல்ல பகுதி யில் நேற்று வியாழக்கிழமை காலை 6.15 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் காயம டைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சிவப்பு நிற ஸ்கூட்டரில் வந்த இருவர் துப்பாக்கிச் சூட்டை நடத்தி விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச் சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட் சகர் சட்டத்தரணி புத்திக மனதுங்க தெரிவித்தார்.

துப்பாக்கிச் சூட்டில் காய மடைந்த நபர் பலப்பிட்டிய ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக் கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேஸ்புக்கில் மதுபான விளம்பரத்தை வெளியிட்டவருக்கு ரூ.25,000 தண்டம்!

கொழும்பு, ஜன. 10

**பேஸ்புக்கில் பியர் விளம்பரத்தை வெளியிட்ட ஒருவருக்கு மதுகம நீதவான் நீதிமன்றம் ரூ.25,000 அபராதம் விதித்துள்ளது. குற்றம் சாட்டப்பட்டவர் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து, நீதிபதி என்.நாணயக்கார அபராதம் விதித்தார்.**

சமூக ஊடகங்களில் இது போன்ற நடவடிக்கைகள் இளைய தலைமுறையினருக்கு குறிப்பிடத்தக்க எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்று குறிப்பிட்டு, நீதிமன்றம் அவரை கடுமையாக எச்சரித்தது.

மதுகம பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ரசிக இந்திரஜித் முனசிங்க மற்றும் வெலிபென்ன பொது சுகாதாரப் பரிசோதகர் ஜி.டி.மதுஷன் ஆகியோர் விளம்பரம் குறித்து விசாரணை நடத்தினர். அதில் ஒரு முக்கிய பியர் பிராண்ட் பெயருடன் கூடிய பியர் போத்தல்களின் புகைப்படங்கள் இருந்தன. இலங்கையில் சமூக ஊட கங்களில் மதுபானத்தை விளம்பரப்படுத்தியதற்காக ஒருவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத் தப்பட்ட முதல் நிகழ்வாக இது உள்ளது. பொது சுகாதார பரிசோதகர்கள் பலமுறை அழைப்பாணை அனுப்பிய போதிலும், சந்தேக நபர் நீதி மன்றத்தில் ஆஜராகத் தவறி விட்டார்.2006 ஆம் ஆண்டு 27 ஆம் எண் தேசிய புகையிலை மற் றும் மதுபான ஆணையச் சட்டத்தின் பிரிவு 35 (1) இன் கீழ் அவர் மீது குற்றச்சாட்டப் பட்டு நீதிமன்றத்தால் 25000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (அ)

# அரிசி இறக்குமதி செய்யும் அனுமதி இன்றுடன் நிறைவு!

கொழும்பு, ஜன. 10

அரிசி இறக்குமதி செய்ய வழங்கப்பட்ட அனுமதி இன்று வெள்ளிக்கிழமையுடன் முடிவடைகிறது.

தற்போதைய அரிசித் தட் டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் ஜனவரி 10 ஆம் திகதி வரை அரிசியை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் அனு மதி வழங்கியிருந்தது.

அதன்படி, நேற்று முன் தினம் நண்பகல் 12 மணி நில வரப்படி சுங்கத் திணைக் களத்தின் அனுமதியூடாக இறக்குமதி செய்யப்பட்ட மொத்த அரிசியின் அளவு 115,000 மெற்றிக் தொன்னைத் தாண்டியுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதில், 45,000 தொன் பழுப்பு அரிசியும், 70,000 தொன் புழுங்கல் அரிசியும் அடங்குவதாக கூறப்படுகிறது.

எவ்வாறெனினும், அரிசி இறக்குமதிக்கு வழங்கப்பட் டுள்ள அனுமதி மீண்டும் நீடிக் கப்படுமா இல்லையா என்பது தொடர்பில் அரசாங்கம் இது வரை எவ்வித அறிக்கையும் வெளியிடவில்லை. (அ)

# மாமனை அடித்து துன்புறுத்திய உப பொலிஸ் பரிசோதகர் கைது!

கொழும்பு, ஜன. 10

தனது மாமனாரை அடித்து துன்புறுத்தினார் எனக் கூறப் படும் உப பொலிஸ் பரிசோ தகர் ஒருவர் கைது செய்யப்பட் டுள்ளதாக மொரந்துடுவ பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு பிரதேசத்தில் வசிக்கும் உப பொலிஸ் பரி சோதகர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந் தேக நபர் நீதிமன்றில் ஆஜர்ப டுத்தப்படவுள்ளதாக பொலிஸ ார் மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மொரந்துடுவ பொலிஸார் மேற்கொண்டுள் ளனர். (அ)

# ஜனாதிபதி ஊடகப் பிரிவில் மாயமான பொருட்கள் குறித்து தீவிர விசாரணை

கொழும்பு, ஜன. 10

ஜனாதிபதி ஊடகப் பிரிவில் இருந்து அண்மையில் காணா மல்போன சில பொருட்கள் குறித்து விசாரணை ஆரம்பிக் கப்பட்டுள்ளதாக குற்றப் புல னாய்வுத் திணைக்களம், கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளது.

கிடைக்கப் பெற்ற முறைப் பாட்டை தொடர்ந்து இந்த விசாரணைகள் தொடங்கப்பட் டுள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்துக்கு கூறியுள்ளது.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகள், இந்த சம்பவம் தொடர்பாக கொள்முதல் அதிகாரியிடம் வாக்குமூலங்களைப் பெற்றுள் ளதாகவும், இந்தப் பொருட்க ளைப் பெற்றவர்களிடமிருந்து வாக்குமூலங்களைப் பெற திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணா மல்போன பொருட்கள் குறித்து விசாரித்து, எதிர்காலத்தில் நீதி மன்றத்துக்கு ஒரு பட்டியலை சமர்ப்பிப்பதாக குற்றப் புல னாய்வுத் திணைக்களம் தெரி வித்துள்ளது. (அ)

# கரைஒதுங்கிய டொல்பின்கள் தீவிர விசாரணைகள் ஆரம்பம்



கொழும்பு, ஜன. 10

வில்பத்து தேசிய பூங்கா கடற்பகுதியில் 11 டொல்பின் களின் சடலங்கள் கரை ஒதுங் கியதாக தகவல் கிடைத்ததை அடுத்து, வனவிலங்கு அதிகா ரிகள் விசாரணைகளை ஆரம் பித்துள்ளனர்.

இதற்கமைய, அனுராதபுரம் வனவிலங்கு கால்நடை வைத்தி யசாலையின் நிபுணர்கள் சந்தன ஜயசிங்க மற்றும் டபிள்யூ. எல்.யு. மதுவந்தி ஆகியோர் டொல்பின்களுக்கு பிரேத பரிசோதனை நடத்தியிருந்தனர்.

அவர்களது முதல்கட்ட அறிக்கையின்படி, வலையில் சிக்கியதால் இந்த டொல்பின் கள் உயிரிழந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

மேலும், உறுதிப்படுத்தலுக் காக விலங்குகளின் உடல் உறுப்புகள் பேராதனை கால் நடை மருத்துவ பீடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பான அறிக்கை புத்தளம் நீதவான் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட் டுள்ளது. (அ)

# உலகப் பத்திரிகை புகைப்பட கண்காட்சி இன்று கொழும்பில்!

கொழும்பு, ஜன. 10

இரண்டு தசாப்தங்களுக்கு பின்னர் முதன்முதலில் இலங் கையில் நடைபெறவுள்ள உலக பத்திரிகை புகைப்பட கண் காட்சி இன்று கொழும்பில் ஆரம்பமாகவுள்ளது.

2024 ஆம் ஆண்டுக்கான உலக பத்திரிகை புகைப்பட கண்காட்சியை இலங்கை பத் திரிகை ஸ்தாபனம் நெதர் லாந்து தூதரகத்துடன் இணைந்து நடத்துகிறது. கொழும்பில் ஆர்கேட் சுதந்திர சதுக்கத்தில் இன்று முதல் 20 ஆம் திகதி வரை காலை 10.30 மணி முதல் இரவு 7.00 மணி வரை பார்வை கட்டணமின்றி இலவசமாக பார்வையிடலாம்.

இதேவேளை, கொழும்பில் சினமன் லைட் ஹோட்டலில் பெப்ரவரி மாதம் 8 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை காலை 10.30 மணி முதல் இரவு 7.00 மணி வரை பார்வை கட்டணமின்றி இலவசமாக பார்வையிடலாம்.

யாழ்ப்பாணத்தில் கலாசார மண்டபத்தில் இம்மாதம் 24 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரையும், காலியில் மாநகர சபையில் இம்மாதம் 31 ஆம் திகதி முதல் பெப்ரவரி மாதம் 02 ஆம் திகதி வரை கண்காட் சியை இலவசமாக பார்வை யிடலாம். (அ)

# புத்தாக்க வேலைத்திட்டத்தின் ஊடாக புதிய சந்தை வாய்ப்புகள் உருவாகும்!

## ஜனாதிபதி அனுரகுமார தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 10

புத்தாக்க வேலைத்திட்டத் தின் ஊடாக உலக சந்தையில் இலங்கைக்கான பங்கை அடைய முடியும் எனவும், புதிய மாதிரிகள் மூலம் புதிய சந்தை வாய்ப்புகள் உருவாகும் எனவும் ஜனாதிபதி அனுரகு மார திசாநாயக்க தெரிவித்துள் ளார்.

ஆய்வு மற்றும் அபிவிருத் திக்கான வணிகமயமாக்கல் அணுகுமுறையை ஏற்படுத்துவ தற்காக ஜனாதிபதி அலுவலகத் தில் இடம்பெற்ற நிகழ்வொன் றில் வைத்து அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்துடன் இணைந்த ஆய்வு மற்றும் அபி விருத்தி செயல்முறை நாட்டின் பொருளாதாரத்தை எழுச்சி பெறச் செய்து, ஒட்டுமொத்த மனித மற்றும் சமூக வளர்ச்சிக் கும் பங்களிப்புச் செய்யும்.

நாட்டில், புத்தாக்க திறன் கொண்டவர்கள் கிராமிய அளவில் உருவெடுத்தாலும், அவர்களின் யோசனைகள் மற்றும் ஆக்கங்களை உள்வாங்குவதற்கு அவர்களுக் குத் தேவையான உட்கட்ட மைப்பு வசதிகள் குறைந்த அள விலேயே காணப்படுகின்றன.

இந்த மனித வளத்திற்கு சுதந்திரமாக சிந்திக்க தேவை யான சூழலை உருவாக்குவதன் ஊடாகவும், அவர்களின் புதிய யோசனைகளை சிறந்த பொறிமுறையின் ஊடாக பெறுவதன் மூலமும் இலங் கையை எதிர்காலத்தில் ஒரு புத்தாக்க மையமாக மாற்ற முடியும்.

இதுவரை, வருடாந்த மொத்த தேசிய உற்பத்தியில் 0.12 சதவீதத்துக்கும் குறைவான அளவே ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட் டுள்ளது.

இலங்கையில் ஏராளமான இயற்கை வளங்கள் இருந்தா லும், அவற்றின் முறையான முகாமைத்துவம் மற்றும் பெறுமதியான ஆராய்ச்சி என் பன இன்னும் பொருளாதார பிரதிபலன்களுக்காகப் பயன்படுத்தப்படவில்லை என்றார். (அ)

# சாரதிகளின் வயதெல்லை மட்டுப்படுத்தப்படவில்லை!

கொழும்பு, ஜன. 10

பொதுப்போக்குவரத்துக்கு இணைத்துக் கொள்ளப்பட வேண்டிய சாரதிகளின் வய தெல்லை 60 வயதுக்குள் மட் டுப்படுத்த ப்பட்டிருக்கவேண் டும் எனப் பரப்பப்படும் தகவல் உண்மைக்கு புறம்பானது என போக்குவரத்து நெடுஞ்சாலை கள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானத்துறை அமைச் சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

இதேவேளை, கிளீன் சிறி லங்கா திட்டத்தின் மூலம் வாக னங்களில் உள்ள அலங்காரப் பொருட்களை அகற்றுவதனால் சாரதிகள் உட்பட அவற்றை விற்பனை செய்யும் வியாபாரி களும் இன்னல்களுக்கு முகங் கொடுத்து வருவதாக பாரா ளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித் துள்ளார்.

அத்துடன், இவ்வாறான திட்டத்தின் மூலம் எதிர் காலத்தில் பெண்களுக்கான அழகு சாதனப்பொருட்களை இறக்குமதி செய்வதும் தடை செய்வதற்கான வாய்ப்பு ஏற் படலாம் என அவர் கூறினார்.

# உச்சத்தைத் தொட்டது பச்சை மிளகாய்

கொழும்பு, ஜன. 10

நாடளாவிய ரீதியில் பொரு ளாதார மையங்களில் ஒரு கிலோ பச்சை மிளகாயின் மொத்த விலை 750 ரூபாய் முதல் 850 ரூபாய் வரை விற்பனை செய் யப்படுகின்றது.இதன்படி, நாரஹேன்பிட்டி சிறப்பு பொரு ளாதார நிலையத் தில் நேற்று ஒரு கிலோ பச்சை மிளகாயின் சில்லறை விலை 1000 ரூபாயாக இருந்தது.

நாடு முழுவதும் உள்ள பல சில்லறை விற்பனைக் கடைக ளில் 100 கிராம் பச்சை மிளகாய் 120 முதல் 150 ரூபாய் வரை விற்கப்படுகிறது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவின் வைரஸ் குறித்து விழிப்புடன் உள்ளது அரசு!

## சபையில் கூறினார் சுகாதார அமைச்சர்

கொழும்பு, ஜன. 10

**சீன வைரஸ் குறித்து அரசாங்கம் மிகவும் விழிப்புடன் இருப்பதாக சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.**

நேற்று பாராளுமன்றத்தில் வைத்தியர் நிஷாந்த சமரவீர எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், தொற்றுநோயியல் பிரிவு இது தொடர்பாக சுகாதார அமைச்சுக்கு தொடர்ந்து அறிக்கைகளை வழங்கி வருவதாகக் கூறினார்.

அத்துடன் வைரஸால் பாதிக்கப்பட்ட நோயாளி ஒருவர் குறித்து தகவல் கிடைத்தால், அது குறித்து நிச்சயமாகத் தெரிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதேவேளை, 2023 ஆம் ஆண்டு டிசெம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் இலங்கையிலும் எச்.எம்.பி.வி வைரஸ் தொற்றுக்குள்ளானவர்கள் கண்டறியப்பட்டதாகவும் இது பரிசோதனைகளின் மூலம் தெரியவந்துள்ளதாகவும், இந்த ஆண்டு எச்.எம்.பி.வி வைரஸ் தொடர்பான பரிசோதனைகள் இன்னும் நடத்தப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.



(அ)

# எச்.எம்.பி.வி வைரஸ் தொடர்பில் தேவையற்ற அச்சம் வேண்டாம்!

## சுகாதார திணைக்களம் அறிவுறுத்து

கொழும்பு, ஜன. 10

சீனாவில் பரவி வரும் எச்.எம்.பி.வி வைரஸ் தொடர்பில் தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்தத் தேவையில்லை எனவும், இந்த வைரஸ் புதிய வைரஸ் அல்ல எனவும், 20 வருடங்களாக இருந்து வரும் வைரஸ் எனவும் சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சிரேஷ்ட பேராசிரியை நிலிகா மாளவிகே தெரிவிக்கையில்-2023 ஆம் ஆண்டு டிசெம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் இலங்கையிலும்எச்.எம்.பி.வி வைரஸ் தொற்றுக்குள்ளானவர்கள் கண்டறியப்பட்டுள்ளனர்.

இது பரிசோதனைகளின் மூலம் தெரியவந்துள்ளது. இந்த ஆண்டு எச்.எம்.பி.வி வைரஸ் தொடர்பான பரிசோதனைகள் இன்னும் நடத்தப்படவில்லை

அத்துடன் கடந்த வருடம் கண்டி பிரதேசத்தில் இந்த வைரஸால் பாதிக்கப்பட்டவர்கள் கண்டறியப்பட்டனர்.

உலக சுகாதார அமைப்பு வழங்கிய தரவுகளின்படி, சீனாவில் எச்.எம்.பி.வி வைரஸை விட சுவாச அமைப்பு தொடர்பான நோய்களின் தொற்றுகள் அதிகம்-என்றார். (அ)

# மக்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேறியதாக இல்லை

## ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன. 10

அரிசி மாபியாவினை முறியடிக்க தேவையான திட்டம் என்ன என்பதையேனும் அரசாங்கம் முன்வைக்க வேண்டும் என எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹஷீம் தெரிவித்தார்.

பாராளுமன்றம் சபாநாயகர் கலாநிதி ஜகத் விக்ரமரத்ன தலைமையில் கூடியது. இதன் போது சபையில் உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-முறைமை மாற்றத்தை எதிர்பார்த்தே நாட்டு மக்கள் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான மக்கள் விடுதலை முன்னணியினரை தெரிவு செய்துள்ளனர்.

நாட்டு மக்களின் வாழ்க்கைச் செலவை குறைத்தல், பொருள் விலையை குறைத்தல் ,அரிசிப் பிரச்னைக்கான தீர்வை வழங்கல்,ஊழல் மோசடிகளை ஒழித்தல் உள்ளிட்ட விடங்களுக்கு அரசாங்கம் 100 நாட்களில் வழங்கியுள்ள தீர்வு என்ன என்பது தொடர்பில் நன்றாகவே தொளிவாகின்றது.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் 100 நாள் வேலைத்திட்டம் விமர்சனத்திற்கு உள்ளாக்கப்பட்டது. ஆனால் அந்த100 நாட்களுக்கும் தற்போதைய 100 நாட்களுக்கும் இடையில் ஒப்பீட்டு ரீதியில் பார்க்கும் போது100 நாள் வேலைத்திட்டத்தில் பொருட்கள் பலவற்றின் விலைகள் குறைக்கப்பட்டன. ஆனால் மக்கள் விடுதலை முன்னணி அரசாங்கம் அவ்வாறு எந்த விடயத்தையும் மேற்கொண்டதாக தெரியவில்லை.

பிரதான எதிர்க்கட்சியாக கடந்த அரசாங்கத்தின் ஆட்சியிலும் பொறுப்புடன் செயற்பட்டோம்.தற்போதும் அவ்வாறாகவே செயற்படுகின்றோம். நாட்டில் அரிசி மாபியா உள்ளமையை அனைவரும் அறிவர். தாம் ஆட்சிக்கு வந்தவுடன் அரிசி மாபியாவை தடுத்த நடவடிக்கை எடுப்போம் என அநுரகுமார ஜனாதிபதி தேர்தல் மேடைகளில் கூறினார். இந் நிலையில் குறைந்த பட்சம் மாபியாவினை முறியடிக்க தேவையான திட்டம் என்ன என்பதையேனும் அரசாங்கம் முன்வைக்க வேண்டும்-என்றார். (அ)

# வடக்குக்கான ரயில் சேவையை விரிவுபடுத்த கவனம் செலுத்துக!

## கஜேந்திரகுமார் சபையில் கோரிக்கை

கொழும்பு, ஜன. 10

வடக்கு மாகாணத்துக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ள ரயில் சேவையை விரிவுபடுத்த போக்குவரத்து அமைச்சு விசேட கவனம் செலுத்த வேண்டும். தமிழர்கள் அதிகமாக வசிக்கும் வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி ரயில் நிலையங்களில் வடக்கு மாகாணத்துக்கான ரயில்களை நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதி, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழான கட்டளைகள், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகள் உட்பட பல ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-மருந்து விநியோக சேவைகளுக்கான நேர்முகத் தேர்வுக்கு விண்ணப்பதாரிகள் அழைக்கப்பட்டு, தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களின் பெயர்ப் பட்டியல் இருக்கின்ற போதும் இதுவரை நியமனங்கள் வழங்கப்படவில்லை.

வடக்கு மாகாணத்தில் இந்த பதவிக்கு 40 வெற்றிடங்கள் காணப்படுகின்றன. ஆனால் பிற மாவட்டங்களைச் சேர்ந்தோர் அழைக்கப்படுகின்றனர். நியமனம் வழங்கப்படாத காரணத்தால் சுகாதார சேவை பாதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு - யாழ் ரயில் சேவை விடயம் தொடர்பிலும் சுட்டிக்காட்ட எதிர்பார்க்கின்றேன். இந்திய நிதித் திட்டத்தின் கீழ் வடக்கு ரயில் பாதை புனரமைக்கப்படுகிறது.

தினசரி கொழும்பு - யாழ். இடையே நான்கு ரயில் சேவைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் அநுராதபுரம் முதல் வவுனியா வரையிலான ரயில் பாதை புனரமைப்புப் பணி காரணமாக அந்த ரயில் சேவைகள் நிறுத்தப்பட்டிருந்தன.

அந்த நான்கு சேவைகளில் இரண்டு சேவைகள் கிழக்கு மாகாணத்துக்கு முன்னெடுக்கப்பட்டபோதும் யாழ்ப்பாணத்துக்கு மீண்டும் கொண்டுவரப்படவில்லை.

தற்போது யாழ்ப்பாணத்துக்கு ஒரு ரயில் சேவையே உள்ளது. அத்துடன் அதிவேக ரயில் சேவை சனி மற்றும் ஞாயிறு தினங்களில் முன்னெடுக்கப்படுகிறது.

இது எமக்கு போதுமானது அல்ல. நான்கு சேவைகளை மேற்கொள்ளவேண்டிய நிலையில் இரண்டு சேவைகளே தற்போது முன்னெடுக்கப்படுகின்றன. இந்த விடயம் தொடர்பில் ரயில் திணைக்களமும், போக்குவரத்து அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதேவேளை யாழ்ப்பாண ரயில் சேவை கொழும்பு வரையிலேயே முன்னெடுக்கப்படுகிறது. கல்கிசை வரையில் நடத்தப்பட வேண்டும் என்பதுடன் தமிழர்கள் அதிகமாக வசிக்கும் வெள்ளவத்தை,பம்பலப்பிட்டி ரயில் நிலையங்களில் நிறுத்தக் கூடியவாறும் சேவைகள் நடத்தப்படவேண்டும்-என்றார். (அ)

# பயிர்ச்செய்கையை பாதுகாக்க மட்டும் துப்பாக்கிகளை வைத்திருக்க அனுமதி!

கொழும்பு, ஜன. 10

பயிர்ச்செய்கைகளை பாதுகாக்கும் செயற்பாடுகளுக்காக மாத்திரம் துப்பாக்கிகளை வைத்திருக்க அனுமதி வழங்கப்படுமென பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

ஏனைய தேவைகளுக்காக தற்போது துப்பாக்கிகளை வழங்கும் நடவடிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அருண ஜயசேகர தெரிவித்தார்.

பொலிஸ் மற்றும் முப்படைகளினால் தனிப்பட்ட பாதுகாப்புக்காக சிவில் நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ள துப்பாக்கிகளை மீண்டும் பாதுகாப்பு அமைச்சுக்கு கையளிப்பதற்கு எதிர்வரும் 20 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இதனிடையே சிவில் நபர்களுக்கு பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள துப்பாக்கிகள் தொடர் பான கணக் காய்வு தொடர்ந் தும் முன்னெ டுக்கப்படுவதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# 2 வருடங்களின் பின் கூடும் தொழில் ஆலோசனைக் குழு

கொழும்பு, ஜன. 10

தொழில் ஆலோசனை தெரிவுக்குழு எதிர்வரும் 15 ஆம் திகதி கூடவுள்ளது.

2023 ஆண்டுக்குப் பின்னர் தொழில் ஆலோசனை தெரிவுக் குழு கூடவில்லை என தொழில் அமைச்சின் செயலாளர் எம். எம் பியதிஸ்ஸ தெரிவித்தார்.

தொழில் ஆலோசனை தெரிவுக்குழு, தொழில் அமைச்சரினால் நியமிக்கப்படும்.

தொழிலாளர்கள் தொடர்பில் காணப்படும் சிக்கல்கள் குறித்து தொழில் ஆலோசனை தெரிவுக்குழுவினூடாகவே தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. (அ)

# ஞானசார தேரருக்கு 9 மாத கடூழிய சிறை!

கொழும்பு, ஜன. 10

இஸ்லாம் மதத்தை அவமதித்த குற்றச்சாட்டின் கீழ், பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு 09 மாத கடூழியச் சிறைத்தண்டனை விதித்து கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்துள்ளது.

இதற்கு மேலதிகமாக அவருக்கு 1500 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

2016 ஜூலை 16 அன்று கிருலப்பனையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், "இஸ்லாம் ஒரு புற்றுநோய். அதை ஒழிக்க வேண்டும்" என்று அவர் கூறினார்.

இது இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கும் வகையிலான நடவடிக்கை என்ற குற்றச்சாட்டின் கீழ் பொலிஸார் இந்த வழக்கை தாக்கல் செய்திருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதிகளின் பெயர் பலகைகள் அகற்றப்பட்டமையால் சிரமம்

காரைதீவு, ஜன.10

**வீதி அபிவிருத்தி அதிகார சபையால் கடந்த காலங்களில் காட்சிப்படுத்தப்பட்ட பெயர் பலகைகள் திடீரென அகற்றப்பட்டு வருகின்றன. இதனால், பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.**




அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை, சாய்ந்தமருது, மாவடிப்பள்ளி, காரைதீவு உள்ளிட்ட சில பகுதிகளின் பெயர் பலகைகள் இவ்வாறு அகற்றப்பட்டுள்ளன.

இந்த பெயர் பலகைகள் சேதமடைந்த நிலையில் எழுத்துகள் தெளிவற்றதாக காணப்பட்டன. இது தொடர்பில் ஆர்வலர்கள் சிலரால் சமூக ஊடகங்கள் ஊடாக வெளிப்படுத்தப்பட்ட நிலையில், பெயர் பலகைகள் திடீரென அகற்றப்பட்டன. தற்காலிகமாக மாற்று ஏற்பாடுகள் எதுவும் செய்யப்படாமல் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் குறித்த பெயர் பலகைகள் அகற்றப்பட்டுள்ளன.

இதனால் வெளியிடங்களில் இருந்து அம்பாறை மாவட்டத்துக்கு சுற்றுலா வரும் பயணிகள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

எனவே, வீதி அபிவிருத்தி அதிகார சபை உடனடியாக இவ்விடயத்தில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

# வாகன வருமான வரிக்கட்டணங்களில் ஒருபகுதி உள்ளூராட்சி மன்றங்களுக்கு

கொழும்பு, ஜன.10

பிரதேச செயலகங்களில் அறவீடு செய்யப்பட்டு வரும் வாகன வருமான வரிக் கட்டணங்களில் ஒரு பகுதியை உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்குமாறு அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர் கோரிக்கை விடுத்துள்ளார். பாராளுமன்றில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

உள்ளூராட்சி மன்றங்கள் வீதிகள், பொதுச் சந்தைகள், களியாட்ட இடங்கள், மைதானங்கள், மயானங்கள், நூலகங்கள், திண்மக் கழிவகற்றல் போன்ற பல்வேறுபட்ட சேவைகளை மக்களுக்காக வழங்கி வருகின்றன.

இந்த நிலையில், அண்மையில் வெளியிடப்பட்ட சுற்று நிருபம் ஒன்றில் உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கான சம்பள கொடுப்பனவில் 40 வீதத்தை சபையின் நிதியிலிருந்து வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டிருப்பதாக அறியமுடிகிறது.

முத்திரை வரி, நீதிமன்ற தண்டப்பணங்கள், சொத்துகளுக்கான வரிகள் போன்றவற்றைக் கொண்டே உள்ளூராட்சி மன்றங்கள் வருமானங்களை ஈட்டிக்கொள்கின்றன.

அதேபோன்று கடந்த காலங்களில் வீதிகளில் பயன்பாட்டில் இருந்த மாட்டு வண்டிக்கான வரி, துவிச்சக்கர வண்டிக்கான வரிகள் போன்றவை அறவீடு செய்யப்பட்டு வந்திருந்தாலும் தற்காலத்தில் அவற்றின் பாவனை குறைவடைந்துள்ளமையால் அவ்வரி அறவீடு நடைமுறையில் இல்லை.

எனவே, வாகன வருமான வரிக் கட்டணங்களில் ஒருபகுதியை உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்க வேண்டும்- என்றார். (எ)

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் திருமலையில் பல உதவிகள்



திருகோணமலை, ஜன.10

சந்நிதியான் ஆச்சிரமம் திருகோணமலை ஆலயங்களுக்கு 300,000 ரூபாய் நிதி உதவியை வழங்கியுள்ளது

திருகோணமலை - மூதூர் 02, பாலநகர் சிறீ முத்துமாரி அம்மன் ஆலய கட்டுமானப் பணிக்காக 100,000 ரூபாய் நிதியும், திருகோணமலை - செல்வநாயகபுரம், உதயபுரி சுவாமி தந்திரதேவா குன்றம் சிறீ லிங்கேஸ்வரர் ஆலய கட்டட கட்டுமானப் பணிக்காக முதல் கட்ட நிதியாக 200,000 ரூபாயும், ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ் சுவாமிகளால் வழங்கப்பட்டன.

அத்தோடு, சந்நிதியான் ஆச்சிரம கல்விச் செயல்திட்ட உதவிகளாக திருகோணமலையில் விவேகானந்தா கல்லூரி, சிங்கள மகா வித்தியாலயம், உவர்மலை விவேகானந்த கல்லூரி, அபேயபுர ஆரம்ப பாடசாலை, கோணேஸ்வரா இந்துக் கல்லூரி , செல்வநாயகபுரம் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கல்வி கற்கும் 13 மாணவர்களுக்கு 53000 ரூபாய் பெறுமதியான கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. இதேவேளை, திருகோணமலை - ஈச்சிலம்பற்று, விநாயகபுரம் சிறீ மாணிக்க விநாயகர் அறநெறிப் பாடசாலையின் கோரிக்கைக்கு அமைய நேரடியாகச் சென்று பார்வையிட்ட மோகனதாஸ் சுவாமிகள் குறித்த அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான சீருடைகள், சத்துணவு வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக கூறியதோடு, அடிப்படை தேவைகளான குடிநீர் விநியோகம் மற்றும் மலசலகூடம் அமைத்து தருவதாகவும் வாக்குறுதி வழங்கினார். (எ-02)

# நெல்லுக்கு நிர்ணய விலையை அரசு உடன் அறிவிக்க வேண்டும்

## விவசாயிகள் கோரிக்கை

கிண்ணியா, ஜன.10

கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட நெடுந்தீவு, சம்மாவஜ்ஜத்தீவு, பூவரசந்தீவு முதலான இடங்களில் செய்கை பண்ணப்பட்ட வேளாண்மை அறுவடை செய்யும் நிலையில் உள்ளது.

இவ்வாறு அறுவடை செய்யப்படவுள்ள நெல்லை அரசாங்கம் இம்முறையாவது சரியான விலையை நிர்ணயம் செய்து தமக்கு வருமானம் வரக்கூடிய அளவுக்கு விவசாயிகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

இப்பகுதியில் சுமார் 500 ஏக்கர் நிலப்பரப்பில் வேளாண்மை செய்கை பண்ணப்பட்டுள்ளது.

இவ்வாறு செய்கை பண்ணப்பட்டுள்ள நிலப்பரப்புகளில் சில இடங்களில் வேளாண்மை நீரில் மூழ்கி காணப்படுகின்றன.

நீரில் மூழ்கி காணப்படுவதனால் சில பகுதிகளை கைகளினால் வெட்டி வருகின்றனர்.

அத்துடன் வீதிகளில் நெல்லை உலர்த்தி வருகின்றனர்.

கடந்த காலங்களில் உரம் வழங்காது விவசாயிகளின் வேளாண்மை செய்கையை அரசாங்கம் நாசப்படுத்தியது

இம்முறையும் வேளாண்மை செய்துள்ளோம். அரசாங்கம் நிர்ணய விலையை இதுவரைக்கும் சொல்லவில்லை.

இடைத்தரகர்கள் எங்களுடைய நெல்லை குறைந்த விலையில் அடாவடித்தனமாக வாங்குவார்கள்.

அரசாங்கம் நிர்ணய விலை தரும் போது தான் எங்களுக்கு இலாபம் கிடைக்கும். பல கஷ்டங்களுக்கு மத்தியில் இவற்றை நாம் செய்துள்ளோம். நெல்லை அரசாங்கம் நிர்ணய விலைக்கு வாங்குமாக இருந்தால் நாங்கள் இலாபம் அடைவோம் என விவசாயிகள் கூறினர். (எ)

# திருமலை நகரை தூய்மைப்படுத்தும் விசேட செயல்திட்டம் ஆரம்பமானது


திருகோணமலை,ஜன.10

கிளீன் சிறீலங்கா திட்டத்தின் கீழ், திருகோணமலை நகரை தூய்மைப்படுத்தும் செயல்திட்டம் நகராட்சி மன்ற செயலாளர் தே. ஜெயவிஷ்ணுவின் வழிநடத்தல் மற்றும் தலைமையில் கடந்த முதலாம் திகதி தொடக்கம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. நகராட்சி மன்றம் தனது சேவையை விஸ்த்தரிக்கும் முகமாக விசேட பணிக்குழு ஊடாக குறித்த திட்டத்தை மேற்பார்வை செய்து வருகின்றது.

இதன் ஒரு கட்டமாக நேற்று முன்தினம் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கமைய சுகாதார வைத்திய அதிகாரி விஜயகுமார் தலைமையில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் நகராட்சி மன்ற உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட விசேட கள விஜயத்தில் பழுதடைந்த மீன்கள் மற்றும் கருவாடுகள் பறிமுதல் செய்யப்பட்டு, அங்கிருந்து அகற்ற உடன் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

இந்த வேலைத்திட்டத்தின் அடுத்த கட்டமாக பேருந்து தரிப்பு நிலையங்களை சுத்திகரித்து இருக்கைகள் மற்றும் கைப்பிடி கம்பங்களை வர்ணம் பூசி புதுப்பொலிவு படுத்தியதுடன், மின்விளக்குகள் முறைப்பாடுகளுக்கமைய உடனுக்குடன் பொருத்தப்படுவதுடன், திண்மக்கழிவு அகற்றும் முறைமையில் சற்று வித்தியாசமாக ஒரு வலயத்துக்கு இரண்டு வாகனங்கள் அடிப்படையில் விசேட திட்டம் ஒன்றை அமுல்படுத்தி அதில் வெற்றிகண்டுள்ளனர். (எ-04)

# சாதனை வீரர்கள் கௌரவிப்பு




காரைதீவு, ஜன.10

காரைதீவு விளையாட்டுக் கழகம் மற்றும் விபுலானந்தா சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் மற்றும் கழக இரவு நிகழ்வில் சாதனை வீரர்கள் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

# மட்டு. விமான நிலைய பயணிகள் முனையத்தை அபிவிருத்தி செய்க

கொழும்பு, ஜன.10

மட்டக்களப்பு சர்வதேச விமான நிலைய பயணிகள் முனையம் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என்று மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஏ. எம். ஹிஸ்புல்லா கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, பொருளாதார நத்தைக் கட்டு பெருமளவுகளை இலங்கையை வளர்ச்சியடைந்த நாடாக மாற்றுவதற்கும் எங்களால் முடிந்த ஒத்துழைப்புகளை வழங்கத்தயாராக இருக்கின்றோம். அதேநேரம், மக்களுடைய பிரச்சினைகளையும் அபிவிருத்தி தேவைகளையும் பற்றி இந்த உயர்ந்த சபையில் பேச வேண்டிய தேவை எமக்கிருக்கிறது என்றும் குறிப்பிட்டார்.

இந்த அரசாங்கமானது நாட்டின் பொருளாதாரத்தில் மிக முக்கிய பங்கு வகிக்கும் - வருமானத்தை ஈட்டித்தரும் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு எந்தவொரு நடவடிக்கையையும் இதுவரை முன்னெடுக்கவில்லை.

குறிப்பாக, கிழக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறையை முன்னேற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் ஹிஸ்புல்லா கோரிக்கை விடுத்தார். பாராளுமன்றத்தில் உரை யாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு கோரிக்கை முன் வைத்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லொஸ் ஏஞ்சல்ஸில் பயங்கர காட்டுத் தீ!

## 30,000 மக்கள் வெளியேற்றம் கட்டடங்கள், வீடுகள் நாசம்!

லொஸ் ஏஞ்சல்ஸ், ஜன.10

**அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸின் மலைப்பகுதியில் ஏற்பட்ட பயங்கர காட்டுத் தீ காரணமாக பல கட்டடங்கள், வீடுகள் எரிந்து நாசமாகின.**



மாநகரம் முழுவதும் புகை மூட்டமாக காணப்படுகிறது. கிட்டத்தட்ட 30, 000 மக்கள் வெளியேற்றப்பட்டனர். இதனால், பெரும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

இந்தக் காட்டுத் தீ காரணமாக, சான்டா மோனிகா மற்றும் மாலிபு இடையேயான பசிபிக் பாலிசேட்ஸ் பகுதியில் சுமார் 1,262 ஏக்கர் (510 ஹெக்டேயர்) பரப்பு எரிந்துள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர். முன்னதாக, வறண்ட காலநிலை நீட்சியினால் உண்டாகும் காற்று காரணமாக பெரும் தீ ஆபத்து இருப்பதாக எச்சரிக்கை விடுத்திருந்தனர்.

அதிகாரிகளின் எச்சரிக்கையைத் தொடர்ந்து ஒரு சில மணிநேரத்தில் தீ வேகமாக பரவியதால், ஆயிரக்கணக்கான மக்கள் நகரை விட்டு வெளியேறும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். டோபாங்கா கனியான் பகுதியில் இருந்து மக்கள் வெளியேறும்போது, ஏராளமான வீடுகள் தீப்பிடித்து எரிந்தன. தீ அங்கிருந்து பசிபிக் கடல் வரை பரவியுள்ளது. (எ)

# அமெரிக்காவின் ஒரு பகுதியாக கனடா மாற வாய்ப்பே இல்லை!

## ட்ரம்புக்கு ஜஸ்டின் ட்ரூடோ பதிலடி



ஒட்டாவா, ஜன.10

கனடா அமெரிக்க தேசத்தின் ஒரு பகுதியாக மாற வாய்ப்பில்லை என்று அந்த நாட்டு பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் 51ஆவது மாகாணமாக கனடா இணையலாம் என ட்ரூடோ பதவி விலகிய நிலையில் அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதியாக தெரிவாகியுள்ள டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்திருந்தார். இதற்கு ட்ரூடோ பதிலடி கொடுத்துள்ளார்.

“கனடா அமெரிக்காவின் ஒரு பகுதியாக மாறும் வாய்ப்பு இல்லை. சமூகம் மற்றும் தொழிலாளர்கள் என இரு நாட்டு தரப்பிலும் ஒருவருக்கொருவர் வர்த்தகம் மற்றும் பாதுகாப்பு சார்ந்து கூட்டாளிகளாக இருப்பதன் மூலம் பலனடைந்து வருகின்றனர்” என எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார். (எ)

# உக்ரைன்மீது ரஷ்யா ஏவுகணை தாக்குதல்

கீவ், ஜன.10

உக்ரைன் மீது ரஷ்யா நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் 13 பேர் உயிரிழந்தனர்.

உக்ரைன், ரஷ்யா இடையே இன்று 1,051ஆவது நாளாக போர் நடைபெற்று வருகிறது. இந்தப் போரில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர். போரை நிறுத்த பல்வேறு நாடுகள் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்தன. போர் தொடர்ந்து நீடித்து வரும் நிலையில் இரு நாடுகளும் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றன.

இந்த நிலையில், உக்ரைனின் ஜபோரிஜ்ஜியா மாகாணத்தில் ரஷ்யா நேற்று முன்தினம் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது. இந்த ஏவுகணை தாக்குதலில் 13 பேர் உயிரிழந்தனர்.

மேலும், 30 படுகாயமடைந்தனர். (எ)

# கிளர்ச்சியாளர்களை குறிவைத்து அமெரிக்கா வான்வழி தாக்குதல்!

சனா, ஜன.10

ஏமனில் ஹவுதி கிளர்ச்சியாளர்களை குறிவைத்து அமெரிக்கா அதிரடி வான்வழித் தாக்குதல் நடத்தியது.

இஸ்ரேல் - ஹமாஸ் இடையே ஓராண்டுக்குமேல் போர் நீடித்து வருகிறது. இந்தப் போரில் 45 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். அதேவேளை, ஹமாஸ் வசமுள்ள 100இற்கும் மேற்பட்ட பணயக் கைதிகளை மீட்க இஸ்ரேல் முயற்சித்து வருகிறது. பணயக் கைதிகளை மீட்கவும், போரை நிறுத்தவும் இரு தரப்பும் பேச்சுகள் நடத்தி வருகின்றன.

இதனிடையே, இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான போரில் ஹமாஸ் அமைப்பினர்களுக்கு ஏமனில் செயல்பட்டு வரும் ஹவுதி கிளர்ச்சியாளர்களும், லெபனானில் செயல்பட்டு வரும் ஹிஸ்புல்லா போராளிகளும் ஆதரவு வழங்கி வருகின்றனர்.

இந்த நிலையில், ஏமனில் அமெரிக்கா நேற்று முன்தினம் வான்வழித் தாக்குதல் நடத்தியது. ஹவுதி கிளர்ச்சியாளர்களை குறிவைத்து ஏமன் தலைநகர் சனா, அம்ரன் மாகாணத்தில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டது. இதில், ஏற்பட்ட பாதிப்பு குறித்த தகவல் இதுவரை வெளியாகவில்லை. (எ)

# சவூதி அரேபியாவில் மீண்டும் கனமழை!



ரியாத், ஜன.10

சவூதி அரேபியாவில் மீண்டும் கனமழை பெய்யும் என்று அந்த நாட்டு வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த வாரம் முழுவதும் மிதமானது முதல் இடியுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும். கிழக்கு மாகாணத்தில் சில பகுதிகளில் ஆலங்கட்டி மழை மற்றும் தூசி நிறைந்த காற்றுடன் கூடிய மழை பெய்யக்கூடும். அவற்றில் கிழக்கு நகரங்களான அல் அஹ்ஸா, ஜுபைல், அல் கோபார், தம்மாம் மற்றும் கதிப் ஆகியவை அடங்கும். மக்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கனமழை காரணமாக சவூதி அரேபியாவில் பொது இடங்களுக்கு மக்கள் செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது. கிழக்கு மாகாணம் மற்றும் ரியாத்தில் உள்ள பாடசாலைகளும் நேரலை வகுப்புகளை எடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கன மழையால் டுபாய் விமான நிலையமும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. விமான நிலையம் முழுவதும் வெள்ளம் சூழ்ந்துள்ளதால் ஏராளமான விமான போக்குவரத்துகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. (எ)

# ஹமாஸ் கடத்திய பணயக் கைதி சடலமாக மீட்பு



காஸாமுனை,ஜன.10

ஹமாஸ் அமைப்பினரால் கடத்தப்பட்ட பணயக் கைதியை இஸ்ரேல் படையினர் சடலமாக மீட்டனர்.

இஸ்ரேலை சேர்ந்த ஜோசப் அல் சைதினியின் சடலத்தை காஸாவின் ரபா நகரிலுள்ள சுரங்கத்தின் உள்ளே இருந்து பாதுகாப்புப் படையினர் மீட்டனர். இதேவேளை, பாதுகாப்புப் படையினர் நடத்திய சோதனையில் மற்றொரு சடலும் மீட்கப்பட்டது. அந்த சடலத்தை அடையாளம் காணும் பணி நடைபெற்று வருகிறது.

2023 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 7ஆம் திகதி ஹமாஸ் நடத்திய தாக்குதலில் ஜோசப் அல் சைதினி மற்றும் அவரது மகன் ஹம்சி உட்பட 250இற்கும் மேற்பட்டோர் காஸா முனைக்கு பணயக் கைதிகளாக கடத்திச் செல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# கௌதம் அதானி மீது அமெரிக்காவில் வழக்கு

## பைடன் அரசுக்கு குடியரசு கட்சி கண்டனம்

வாஷிங்டன், ஜன.10

கௌதம் அதானி மீது வழக்குப் பதிவு செய்தமை இந்தியா, அமெரிக்கா இடையிலான உறவில் பாதிப்பை ஏற்படுத்தும் என ஜனாதிபதி ஜோ பைடன் அரசுக்கு குடியரசு கட்சி எம்.பி. கண்டனம் தெரிவித்துள்ளார்.

இந்திய தொழிலதிபர் கௌதம் அதானி மற்றும் அவரது நிறுவன உயர் அதிகாரிகள் மீது அமெரிக்க நீதித் துறை வழக்குப் பதிவு செய்தது.

இந்த நிலையில், அமெரிக்காவின் குடியரசு கட்சி கட்சி எம்.பியும் பாராளுமன்ற நீதிக் குழு உறுப்பினருமான லான்ஸ் கூடன் அந்த நாட்டு அட்டர்னி ஜெனரல் மெரிக் பி. கார்லேண்டுக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார். அதில்,கௌதம் அதானி மீது அமெரிக்க நீதித் துறை வழக்குப் பதிவு செய்திருப்பது ஒருதலைப்பட்சமான நடவடிக்கை. இந்த செயல்பாடு, ஆசியா - பசிபிக் பிராந்தியத்தில் வலுவான நட்பு நாடுகளில் ஒன்றாக விளங்கும் இந்தியா போன்ற நாடுகளுடனான நட்புறவை பாதிக்கும் வகையில் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். (எ)

# 6 சகோதரிகளை திருமணம் செய்த 6 சகோதரர்கள்!

பஞ்சாப், ஜன.10

பாகிஸ்தானில் வரதட்சணை எதுவும் வாங்காமல் சகோதரர்கள் 6 பேர், 6 சகோதரிகளை திருமணம் செய்துள்ளனர்.

பஞ்சாப் மாகாணத்தில் ஆச்சரியப்படும் வகையில் இந்தத் திருமணம் நடந்துள்ளது. இதன்படி, 6 சகோதரர்கள் மணமக்கள் வீட்டாரிடம் வரதட்சணை எதுவும் வாங்காமல் 6 சகோதரிகளை திருமணம் செய்துள்ளனர். இந்த திருமணம் மிக எளிமையாக நடந்து முடிந்துள்ளது.

100 விருந்தினர்கள் மட்டுமே திருமணத்தில் கலந்து கொண்டனர்.

இஸ்லாமிய போதனைகளின்படி, திருமணத்தில் எளிமையை கடைப்பிடிக்க மணமகன்கள் விரும்பியுள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

# மலேசிய ஓபன் பட்மிண்டனில் இந்திய வீரர் பிரனாய் வெற்றி

கோலாலம்பூர், ஜன.10

மலேசிய ஓபன் பட்மிண்டன் தொடரில் முதல் சுற்றில் இந்திய வீரர் பிரனாய் வெற்றி பெற்றுள்ளார்.

கனடாவின் பிரையன் யங்கை வீழ்த்திய பிரனாய் 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

இந்தப் போட்டி தொடர் கோலாலம்பூரில் நடைபெற்று வருகிறது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவின் முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் இந்திய வீரர் எச். எஸ். பிரனாய் - கனடாவின் பிரையன் யங் ஆகியோர் மோதினர்.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் சிறப்பாக விளையாடிய பிரனாய், 21 - 12, 17 - 21, 21 - 15 என்ற செட் கணக்கில் கனடாவின் பிரையன் யங்கை வீழ்த்தி 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார். அடுத்து பிரனாய், சீனாவின்



ஷி பெங் லீயை எதிர்கொள்கிறார். (எ)

## தீக்சனா ஹட்ரிக்



ஹாமில்டன்,ஜன.10

நியூசிலாந்துக்கு எதிராக நடைபெற்ற இரண்டாவது ஒருநாள் போட்டியில் இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர் மகேஷ் தீக்சனா ஹட்ரிக் விக்கெட் வீழ்த்தினார்.

நியூசிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 37 ஓவர்களில் 9 விக்கெட்கள் இழந்து 255 ஓட்டங்கள் எடுத்தது. இலங்கை அணியால் 142 ஓட்டங்களை மட்டுமே எடுக்க முடிந்தது. இதன் மூலம் நியூசிலாந்து 113 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இருப்பினும், இலங்கை தரப்பில் அபாரமாக பந்துவீசிய மகேஷ் தீக்சனா ஹட்ரிக்குடன் 4 விக்கெட்களை வீழ்த்தி அசத்தினார். (எ)

### இலங்கையுடன் டெஸ்ட்

## ஸ்மித் தலைமையில் ஆஸி அணி அறிவிப்பு

சிட்னி, ஜன.10

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளில் விளையாடவுள்ளது. இந்த நிலையில், டெஸ்ட் தொடருக்கான அணியை அவுஸ்திரேலியா கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

அந்த அணியின் தலைவர் பட் கம்மின்ஸ் இதில் விளையாடாத காரணத்தால் அவருக்குப் பதிலாக அணியை ஸ்டீவ் ஸ்மித் வழிநடத்துகிறார்.

இலங்கையில் உள்ள ஆடுகளங்கள் சுழற்பந்து வீச்சுக்கு சாதகமாக இருக்கும் என்பதால் அதற்கு ஏற்ற வகையில் அணியை அறிவித்துள்ளது அவுஸ்திரேலியா. இதில் மொத்தம் 16 பேர் இடம்பெற்றுள்ளனர்.

“இலங்கை சுற்றுப்பயணம் சவாலானது. அதை கருத்தில் கொண்டு அங்கு நிலவும் சூழலுக்கு ஏற்ப அணியை அறிவித்துள்ளோம். போட்டிக்கு முன்னதாக கள சூழலுக்கு ஏற்ப ஆடும் அணியை அறிவிக்கும் வகையில் இந்த அணியுள்ளது”என அவுஸ்திரேலிய அணியின் தேர்வாளர் ஜோர்ஜ் பெய்லி தெரிவித்தார்.

அவுஸ்திரேலிய அணி இலங்கைக்கு எதிராக இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும், ஒரே ஒரு ஒருநாள் போட்டியிலும் விளையாடுகிறது. முதல் டெஸ்ட் போட்டி ஜனவரி 29ஆம் திகதி தொடங்குகிறது. இரண்டாவது டெஸ்ட் பெப்ரவரி 6 அன்றும், ஒருநாள் போட்டி பெப்ரவரி 13 அன்றும் நடைபெறுகிறது.

அவுஸ்திரேலிய அணி விவரம்: ஸ்டீவ் ஸ்மித் , அபாட், ஸ்காட் போலண்ட், அலெக்ஸ் ஹேரி, கூப்பர் கோனொலி, ட்ராவிஸ் ஹெட், ஜாஷ் இங்கிலிஸ், உஸ்மான் கவாஜா, சாம் கான்ஸ்டாஸ், மாட் குஹ்னெமன், மார்னஸ் லபுஷேன், நாதன் லயன், நாதன் மெக்ஸ்வீனி, டாட் மர்பி, மிட்செல் ஸ்டார்க், வெப்ஸ்டர் ஆகியோர் அணியில் இடம்பெற்றுள்ளனர். (எ)

## யூகி பாம்ப்ரி - ஆலி ஜோடி காலிறுதிக்கு முன்னேற்றம்




ஆக்லாந்து, ஜன.10

நியூசிலாந்தின் ஆக்லாந்து நகரில் ஏ. எஸ். பி. கிளாசிக் ரென்னிஸ் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் ஆடவருக்கான இரட்டையர் பிரிவில் இந்தியாவின் யூகி பாம்ப்ரி, பிரான்சின் அல்பனோ ஆலிவெட்டி ஜோடி 6 - 4 6 - 4 என்ற நேர் செட் கணக்கில் நெதர்லாந்தின் சாண்டர் அரெண்ட்ஸ், இங்கிலாந்தின் லூக் ஜோன்சன் ஜோடியை வீழ்த்தி காலிறுதி சுற்றுக்கு முன்னேறியது. (எ)

## ஆப்கான் ஆலோசகராக யூனிஸ் கான் நியமனம்

காபூல், ஜன.10

ஐ. சி. சி. சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடரில் பங்கேற்கும் ஆப் கானிஸ்தான அணியின் ஆலோசகராக பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் யூனிஸ் கான் நியமிக்கப் பட்டுள்ளார். இது குறித்த தகவல் அதிகாரபூர்வமாக வெளியாகியுள்ளது.



பெப்ரவரி மாதம் பாகிஸ்தான் நாட்டில் இந்த தொடர் நடைபெறுகிறது. இதில், இந்திய அணி பங்கேற்று விளையாடும் போட்டிகள் மட்டும் டுபாயில் நடைபெறுகிறது. பெப்ரவரி 19ஆம் திகதி தொடங்கும் இந்தத் தொடரில் மொத்தம் 8 அணிகள் பங்கேற்று விளையாடுகின்றன. தலா 4 அணிகள் வீதம் இரண்டு பிரிவுகளாக அணிகள் பிரிக்கப்பட்டு குரூப் சுற்று போட்டிகள் நடைபெறுகிறது. குரூப் ‘ஏ’-வில் இந்தியா, பாகிஸ்தான், நியூசிலாந்து மற்றும் பங்களாதேஷ் அணிகள் இடம்பெற்றுள்ளன. குரூப் ‘பி’-யில் அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, தென்னாபிரிக்கா மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகள் இடம்பெற்றுள்ளன. (எ)

## நியூசிலாந்து அணி வீரர் மார்டின் கப்தில் ஓய்வு



வெலிங்டன், ஜன.10

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக மார்டின் கப்தில் அறிவித்துள்ளார்.

நியூசிலாந்து அணியின் அதிரடி தொடக்க ஆட்டக்காரர் மார்டின் கப்தில் (வயது- 38). இவர் அந்த அணிக்காக கடந்த 2009ஆம் ஆண்டு அறிமுகமானார். மார்டின் கப்தில் இதுவரை 47 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 2586 ஓட்டங்களும், 198 ஒருநாள் போட்டிகளில் 7346 ஓட்டங்களும், 122 ரி- 20 போட்டிகளில் 3531 ஓட்டங்களும் எடுத்துள்ளார்.

இவர் நியூசிலாந்து அணிக்காக கடைசியாக 2022 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் விளையாடினார். அதன் பின்னர் நியூசிலாந்து அணியில் இடம்பிடிக்காக கப்தில் நேற்று சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். இவர் கடந்த 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற 50 ஓவர் உலகக் கிண்ணத் தொடரில் ஒரு போட்டியில் 237 ஓட்டங்கள் அடித்து சாதனை படைத்தார்.

மேலும், ஒருநாள் போட்டிகளில் இரட்டைச் சதம் அடித்த முதல் நியூசிலாந்து வீரர் என்ற சாதனையையும் கப்தில் படைத்துள்ளார். இவர் கட்ந்த 2019ஆம் ஆண்டு நடைபெற்ற 50 ஓவர் உலக கிண்ணத் தொடரில் அரையிறுதி ஆட்டம் ஒன்றில் இந்தியாவின் மகேந்திர சிங் டோனியை ஆட்டமிழக்க செய்ததன் மூலம் மிகவும் பிரபலமடைந்தார். (எ)

## டெஸ்ட் தரவரிசையில் முதலிடத்தில் பும்ரா



டுபாய், ஜன.10

டெஸ்ட் கிரிக்கெட் பந்து வீச்சாளர்களுக்கான தரவரிசை பட்டிலை ஐ. சி. சி. வெளியிட்டுள்ளது. இதில், இந்திய அணியின் ஜஸ்பிரீத் பும்ரா 908 புள்ளிகளுடன் முதலிடத்தில் தொடர்கிறார். இடது கை சுழற்பந்து வீச்சாளரான ரவீந்திர ஜடேஜா ஒரு இடம் முன்னேறி 9ஆவது இடத்தை, அவுஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஸ்காட் போலண்டுடன் பகிர்ந்து கொண்டுள்ளார்.

இந்திய அணிக்கு எதிரான சிட்னி டெஸ்ட் போட்டியில் இரு இன்னிங்ஸையும் சேர்த்து 10 விக்கெட்களை வீழ்த்திய ஸ்காட் போலண்ட் 29 இடங்கள் முன்னேற்றம் கண்டுள்ளார். அவுஸ்திரேலிய அணியின் தலைவர் பட் கம்மின்ஸ் 2ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார். தென்னாபிரிக்காவின் ககிசோ ரபாடா ஒரு இடம் முன்னேறி 3ஆவது இடத்தை அடைந்துள்ளார்.

காயமடைந்துள்ள அவுஸ்திரேலிய அணியின் ஜோஷ் ஹேசில்வுட் இரு இடங்கள் பின்தங்கி 4ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளார். துடுப்பாட்ட வீரர்கள் தரவரிசை பட்டியலில் இந்திய அணியின் ரிஷப் பண்ட் 3 இடங்கள் முன்னேறி 9ஆவது இடத்தை பிடித்துள்ளார். அவர், சிட்னி டெஸ்ட் போட்டியின் 2ஆவது இன்னிங்ஸில் 33 பந்துகளில் 61 ஓட்டங்கள் விளாசியிருந்தார். இந்தியாவின் தொடக்க வீரரான யஷஸ்வி ஜெய்ஸ்வால் 4ஆவது இடத்தை தக்கவைத்துள்ளார்.

தென்னாபிரிக்க அணியின் தலைவர் தெம்பா பவுமா 3 இடங்கள் முன்னேறி 6ஆவது இடத்தை பிடித்துள்ளார். அதே அணியைச் சேர்ந்த கைல் வெரெய்ன் 4 இடங்கள் முன்னேறி 25ஆவது இடத்தை எட்டியுள் ளார். விராட் கோலி 3 இடங்கள் பின்தங்கி 27ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளார். தரவரிசை பட்டிய லில் 12 வருடங்களுக்குப் பிறகு தற்போதுதான் அவர், கடும் சரிவை சந்தித்துள்ளார். கடைசியாக அவர், 2012 ஆம் ஆண்டு டிசெம்பரில் 36ஆவது இடத்தில் இருந்தார்.(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசாங்க...

ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவிச் செயலர் திருமதி சாரதாஞ்சலி மனோகரன் கலந்துகொண்டு, 'கிளீன் சிறிலங்கா வேலைத் திட்டம் தொடர்பான விரிவான விளக்கங்களை வழங்கியதுடன், அரசாங்க அலுவலர்களின் கேள்விகளுக்கும் பதிலளித்தார்.

இதன் பின்னர் உரையாற்றிய வடக்கு மாகாண ஆளுநர், “கிளீன் சிறிலங்கா“ வேலைத் திட்டம் கௌரவ ஜனாதிபதியால் தொடக்கி வைக்கப்பட்டது என்பதையும் இந்த அரசாங்கத்தின் அந்தக் கொள்கையை நடைமுறைப் படுத்தும் பொறுப்பு ஒவ்வொருவருக்கும் உண்டு என்றும் குறிப்பிட்டார்.

மக்களின் சேவைகளை விரைவாகவும், தரமாகவும், அன்பாகவும் வழங்குவது அரச பணியாளர்கள் ஒவ்வொருவரினதும் பொறுப்பு எனச் சுட்டிக்காட்டிய ஆளுநர், அந்த மாற்றத்தை அரச பணியாளர்களின் நடத்தையில் ஏற்படுத்துவதன் ஊடாக செய்ய முடியும் என்று குறிப்பிட்டார். மேலும், இந்த நடத்தை மாற்றங்கள் உடனடியாகச் செய்யக் கூடியவை எனக் குறிப்பிட்ட ஆளுநர், 2025ஆம் ஆண்டில் வடக்கு மாகாணத்தில் இந்த மாற்றங்களை ஏற்படுத்தும் ஆண்டாக மாற்றுவோம்- என்றார்.

(அ-02)

## எமக்கும்...

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கம் ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கைகளை அமுல்படுத்துவதாக எதிர்க்கட்சிகள் தொடர்ச்சியாக கூறி வருகின்றன. கடந்த நூறு நாட்கள் அவர் அரசாங்கத்தில் இருந்து இருந்தால் எத்தனை தடவைகள் வெளிநாடுகளுக்குச் சென்றிருப்பார்? ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அரச முறை பயணமாக இந்தியாவுக்குச் சென்றார். இரண்டாவது பயணத்தை மேற்கொள்ள உள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் இருந்து இருந்தால் அவரது அமைச்சரவையில் உள்ள அமைச்சர்கள் எத்தனை தடவை வெளிநாடுகளுக்குச் சென்றிருப்பார்கள்? எவ்வளவு செலவு செய்திருப்பார்கள்? எமது அமைச்சர்கள் எவரும் அவ்வாறு செய்யவில்லை.

கடந்த நூறு நாட்களில் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் எம்.பிகளுக்கு எதிராக ஊழல் - மோசடி குற்றச்சாட்டை எவரும் முன்வைத்தார்கள்?. கொடுக்கல் வாங்கல்களில் மோசடி, விலை மனுக் கோரலில் மோசடி என எவ்வித குற்றச்சாடுகளும் முன்வைக்கப்படவில்லை. இலஞ்சம் பெற்றிருக்கிறார்கள் என எவ்வித குற்றச்சாட்டுகளும் இல்லை. அவ்வாறெனில் ரணில் விக்கிரமசிங்கவை எவ்வாறு எம்முடன் சேர்த்து பேச முடியும்?

அரிசி தட்டுப்பாடு உட்பட சில நடைமுறை ரீதியான பிரச்னைகள் உள்ளன. நடைமுறை பிரச்னைக்கும் முழுமையாக மக்கள் எதிர்பார்க்கும் மாற்றத்துக்கும் இடையில் வேறுபாடுகள் உள்ளன. இந்த நாட்டு மக்கள் இது தொடர்பில் அறிவார்கள். 49 நாட்களில் நாட்டை கட்டியெழுப்ப முடியாதென மக்களுக்கு தெரியும். ஏற்கனவே அமைச்சர்களாக இருந்தவர்களுக்கும் இது தெரியும். தெரிந்துகொண்டுதான் எம்மை உருவாக்குமாறு கோருகின்றனர்.

கிளீன் ஸ்ரீலங்கா உட்பட பல வேலைத்திட்டங்களை கிராமங்களுக்கு கொண்டுசென்றுள்ளோம். ஒரு ரூபா கூட ஊழல் செய்யாது இந்தப் பணிகளை செய்கின்றனர். கோப் குழு நியமிக்கப்பட்டுள்ளது. இதன் ஊடாக தகவல்களை பெற்று ஊழல் - மோசடிகள் இடம்பெற்றால் அதனை ஊடகங்கள் ஊடாக வெளிப்படுத்த முடியும் - என்றார். (அ)

## எச்.எம்.பி.வி...

அளிக்கும் போதே அவர் இவ்வாறு பதிலளித்தார்.

“வைரஸிற்கான சோதனைகளை மேற்கொள்ளும் இடங்கள் பெயரிடப்பட்டுள்ளன. அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

தொற்றுநோயியல் பிரிவு தொடர்ந்து வைரஸ் குறித்த விவரங்களை சுகாதார அமைச்சுக்கு வழங்கி வருகிறது. ஜனாதிபதியும் இந்த விடயத்தில் சிறப்பு கவனம் செலுத்தியுள்ளார்.

சந்தேகத்திற்குரிய நோயாளி ஒருவர் பதிவாகியுள்ளார். ஆனால், அவருக்கு நடத்தப்பட்ட சோதனையின் பெறுபேறு எதிர்மறையாக உள்ளது.” என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன், நோயெதிர்ப்பு தொடர்பான விசேட வைத்திய நிபுணர் பேராசிரியர் நீலிகா மாலவிகே சில காலத்திற்கு முன்பு இலங்கையில் எச்.எம்.பி.வி நோயாளிகள் கண்டறியப்பட்டதாகக் கூறியதை சில ஊடகங்கள் தவறாக மேற்கோள் காட்டியதாகவும், முக்கியமான பிரச்னைகளை அறிக்கையிடும் போது பொறுப்புடன் செயல்படுமாறு ஊடகங்களைக் கேட்டுக்கொள்வதாகவும் அமைச்சர் கூறினார். (அ)

## தொல்பொருள்...

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள ஈச்சிலம்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் உள்ளடங்கும் வட்டவான் கிராமசேவர் பிரிவில் அடங்கும் 224 விவசாயிகளுக்கு சொந்தமான 380 ஏக்கருக்கு மேற்பட்ட நெற்பயிரோடு கூடிய விவசாய நிலத்தை தமது தொல்லியல் பகுதி என அறிவித்துள்ளது.

அதேபோன்று குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ளடங்கும் குச்சவெளி கிராம சேவையாளர் பிரிவில், 1985 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே விவசாயிகள் பயன்படுத்தி வந்த நெற்களஞ்சியம் மற்றும் சந்தைப் பகுதியை தொல்லியல்துறை தொல்பொருள் பகுதி என அறிவித்துள்ளது.

இது மட்டுமல்லாமல் இதனை விடவும், குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ளடங்கும் தென்னைமரபு அடி, புல்மோட்டை, திரியாய், குச்சவெளி, ஜாயா நகர், கும்புறுப்பிட்டி, நிலாவெளி, பெரியகுளம் முதலிய கிராம சேவை பிரிவுகளை உள்ளடக்கிய 1994 ஏக்கர் நிலத்தை எல்லைக்கற்களை இட்டு பிடித்து வைத்துள்ளது.

இந்த செயலானது, நெல் உற்பத்தியில் பாரிய குறைப்பை ஏற்படுத்தியுள்ளது என்பதனையும், இது நாட்டுக்கு பேரிழப்பு என்பதனையும், இந்த அவையின் மேலான கவனத்திற்கு கொண்டு வருகின்றேன்.

இதற்கு மேலாக, இலங்கையில் புகழ்பெற்ற கோணேஸ்வரர் கோயில் வளாகத்தில் உள்ள 453 ஏக்கர் நிலத்தையும் தொல்பொருள் துறை கையகப் படுத்தி வைத்துள்ளது.

இது மட்டுமல்லாமல் வனத்துறை எல்லைக் கற்களை இடாத பகுதிகளில் கூட மக்கள் தமது காணிகளில் விவசாயத்தில் ஈடுபட வனத்துறையிடம் ஒப்புலை பெறமுடியாத நிலை காணப்படுகிறது.

இதனால் ஆயிரக்கணக்கான கால்நடை வளர்ப்பாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதோடு, பல்லாயிரக்கணக்கான கால்நடைகள் போதிய உணவின்றி இன்னலுறுகின்றன.

ஆகவே, இந்த விடயத்தில் அரசாங்கம் உரிய கவனம் செலுத்தி தொல்பொருள் துறை,வனத்துறை வனவிலங்குத்துறை, துறைமுக அதிகார சபை, புத்தபிக்குகள் ஆகியோர் பிடித்து வைத்துள்ள மக்களுடைய காணிகளை விடுவித்து, மக்கள் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடவும், அதன் வழி நெல் உள்ளிட்ட உணவு உற்பத்தியினை பெருக்கவும் ஆவன செய்ய வேண்டும்- என்றார். (அ)

# புன்னாலைக்கட்டுவன் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் பலி!

யாழ்ப்பாணம் ,ஜன.10

யாழ்ப்பாணம் - புன்னாலைக்கட்டுவன் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் ஒருவர் ஸ்தலத்தில் உயிரிழந்தார்.

புத்தூரிலிருந்து - சுன்னாகம் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த ஹயஸ் ரக வாகனம் பலாலி வீதியில் சென்ற மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

குறித்த விபத்தில் ஏழாலை வடக்கு பகுதியைச் சேர்ந்த 59 வயதான சங்கரப்பிள்ளை ஜெய்சங்கர் என்பவர் உயிரிழந்துள்ளார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

விபத்து சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)



# மியன்மார் அகதிகளில் இருவர் வைத்தியசாலையில் அனுமதி!

முல்லைத்தீவு, ஜன. 10

முல்லைத்தீவு - கேப்பாபிலவு விமானப்படைத்தளத்தில் கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாக தங்கவைக்கப்பட்டுள்ள 115 மியன்மார் ரோகிங்கியா அகதிகளில் இருவர் உடல் சுகயீனம் உற்ற நிலையில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலைவேளை குறித்த அகதிகளில் இருவருக்கு வயிற்றுவலி காரணமாக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

33 அகவையுடைய பெண் ஒருவரும் 12 அகவையுடைய சிறுவன் ஒருவருமே இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையின் விடுதியில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும், இவர்கள் பொலிஸ் பாதுகாப்புடன் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

(அ)

## மலையக...

பிரச்னை தொடர்பில் மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற் போக்குக் கூட்டணி எடுக்கும் தீர்மானங் களுக்கு நாம் ஆதரவளிப்போம்.

மலையக மக்கள் எப்போதும் பாதிக்கப்பட்டவர்களோகவே உள்ளனர். உலக வரைபடத்தில் லயன்களில் வாழ்பவர்களாக மலையக மக்களே இருக்கிறார்கள். எந்தவொரு அடிப்படை வசதியும் இன்றி மலையக மக்கள் வாழ்கின்றனர். அவர்களுடைய வாழ்வில் மாற்றம் மிகவும் முக்கியமானது.

நலன்புரி நடவடிக்கைள் மீள் பரிசீலனை செய்யப்பட வேண்டும். நலன்புரி தேவைப்படுவோருக்கு இன்றி வசதிப்படைத்தோருக்கு நலன்புரி

சென்றடைந்ததை காணமுடிகின்றது. தேவையுடையோர் பயனடைய வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு - என்றார். (அ)

## உள்ளூராட்சி...

சமர்ப்பிக்கப்பட்டுள்ள சட்டமூலத்தின் இரண்டாவது சரத்தில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. நடத்தப்படவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்காக முன்வைக்கப்பட்டுள்ள வேட்பு மனுக்கள் எந்த சந்தர்ப்பத்திலும் முன்வைக்கப்படவில்லையாயின் செல்லுபடியற்ற மற்றும் வலுவற்றதாக இதனூடாக கருதப்படும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வேட்புமனு தாக்கல் செய்த பல அரச ஊழியர்கள் பாதிக்கப்பட்டனர். சம்பளம் மாத்திரம் அல்ல பதவி உயர்வும் அவர்களுக்கு இல்லாது போனது. இவர்களுக்காக ஏதெனுமொன்றை செய்ய வேண்டியது அவசியமாகும். இந்த சட்டமூலத்தில் பல குறைபாடுகள் உள்ளன. அவற்றை திருத்தவேண்டியது அவசியமாகும். குறைபாடுகளின் காரணமாக சில உள்ளூராட்சி மன்றங்களின் பெரும்பான்மையை பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்படும்-என்றார். (அ)

## மண்ணெண்ணெய்...

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருகையில்-

நேற்று மதியம் தாயார் சமையல் செய்து கொண்டு இருந்தவேளை குழந்தை மண்ணெண்ணெயை எடுத்து குடித்துவிட்டு, உடலிலும் பூசிவிட்டு விளையாடிக்கொண் டிருந்தது. இதை அவதானித்த தாயார் குழந்தையை தூக்கினார். அப்போது குழந்தை மயக்கமடைந்தது.

பின்னர் கோப்பாய் வைத்தியசாலைக்கு கொண்டு சேர்க்கப்பட்டு, அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் பிற்பகல் 4 மணியளவில் குழந்த உயிரிழந்தது.

குழந்தையின் சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம் குமார் மேற் கொண்டார். உடற்கூற்று பரிசோதனை களின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.(அ)

## மீளக்குடியேறிய...

வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.

குறிப்பாக வடக்கு-கிழக்கு மாவட்டங்களில் உள்ள பெரும்பாலானோர் தாங்கள் மீள்குடியேறியபோது அவர்களுக்கு ஒன்றரை இலட்சத்திலிருந்து இரண்டரை, மூன்று இலட்சம் வரையிலான மீள்குடியேற்ற நிதி வழங்கப்பட்டது. ஆனால் பல மாவட்டங்களில் அந்த நிதி சரியான முறையில் கணக்கிடவோ வழங்கப்படவோ இல்லை.

குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்தில் 38,000 குடும்பங்கள் மீளக்குடியேறியிருந்தார்களா. இதில் 11,791 பேருக்கு மாத்திரமே மீள்குடியேற்ற நிதி வழங்கப்பட்டிருக்கிறது. மீதமுள்ளோருக்கு இதுவரை அந்த நிதி வழங்கப்படவில்லை.

இந்த அரசின் காலத்திலாவது நீதியான முறையில் அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபர்கள் அதற்கான விழிப்புணர்வை மக்களுக்கு வழங்கவேண்டும். அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். இது அவர்களின் அடிப்படை உரிமை-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu





# இந்திய இழுவைப் படகுகள் அடாவடி சுழிபுரம் மீனவரின் வலைகள் நாசம்!

## 7 இலட்சம் ரூபாவுக்கு மேல் நட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 10

**இந்திய இழுவைப் படகுகள் அத்துமீறி இலங்கை கடற்பரப்பினுள் உள்நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டமையால் சுழிபுரம், காட்டுப்புலம் பகுதி மீனவர் ஒருவரின் ஏழு இலட்சம் ரூபா பெறுமதியான வலைகள் அறுக்கப்பட்டுள்ளன.**

நேற்றுமுன்தினம் இரவு குறித்த மீனவர் திருவடிநிலை கடற்பரப்பில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது அத்துமீறி நுழைந்த இந்திய இழுவைப் படகுகள் அவரது வலைகளை அறுத்துள்ளன. இதனால் அவரிடம் இருந்த 32 வலைகளில் 26 வலைகள் அறுக்கப்பட்டு ஆறு வலைகளே மீதமாகியுள்ளன. எஞ்சிய வலைகளும் சேதமடைந்த நிலையிலேயே காணப்படுகின்றன.

இது குறித்து பாதிக்கப்பட்ட மீனவர் கருத்து தெரிவிக்கையில்-

நேற்று முன் தினம் இரவு 10 மணியளவில் அசத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட ட்ரோலர்கள் எமது வலையை மட்டுமல்லாமல் வேறு சங்கங்களின் வலைகளையும் அறுத்துள்ளன. இப்பொழுது மீன்பிடிப் பருவகாலம். இந்திய இழுவைப் படகுகளின் இவ்வாறான செயற்பாடுகளால் நாங்கள் உழைக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

ஏழு இலட்சம் ரூபா வங்கியில் கடன் பெற்றே இந்த வலைகளை வாங்கித் தொழில் செய்தேன். எனது வலைகளை இந்திய இழுவைப் படகு அறுத்துச் சென்றதால் வாழ்வாதாரத்துக்கு என்ன செய்வது, வங்கிக் கடனைச் செலுத்த என்ன செய்வது என்று தெரியாமல் தவிக்கின்றேன்.

புதிதாக பதவியேற்றுள்ள ஜனாதிபதி பல நல்ல வேலைத்திட்டங்களை செய்கின்றார். அதுபோல இந்திய மீனவர்கள் பிரச்னையையும் தீர்த்து வையுங்கள். புதிதாக வந்த அமைச்சர் இதற்கு ஒரு தீர்க்கமான முடிவு எடுத்து இந்திய இழுவைப் படகுகளை கட்டுப்படுத்த வேண்டும் - என்றார். (அ-05)

# நிதி ஒதுக்கீட்டு சட்டமூலத்தை சபையில் சமர்ப்பித்த பிரதமர்!



கொழும்பு, ஜன. 10

பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய 2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை நேற்று பாராளுமன்றில் சமர்ப்பித்தார்.

குறித்த சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு பெப்ரவரி 17 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

அதன்படி, இரண்டாம் வாசிப்பு விவாதம் பெப்ரவரி 18 ஆம் திகதி முதல் பெப்ரவரி 25 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதுடன், இரண்டாம் வாசிப்பு வாக்கெடுப்பும் 25 ஆம் திகதி பிற்பகல் இடம்பெறவுள்ளது.

பெப்ரவரி 27 ஆம் திகதிக்கும் மார்ச் 21 ஆம் திகதிக்கும் இடையில் வரவு - செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான விவாதம் நடத்தப்பட உள்ளது.

வரவு - செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு மார்ச் 21 ஆம் திகதி பிற்பகல் நடைபெறவுள்ளது. (அ)

# அரச ஊழியர்கள் சம்பளம் 2025 பட்ஜெட்டில் அதிகரிப்பு!

கொழும்பு, ஜன. 10

எதிர்வரும் வரவு - செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களின் சம்பளத்தில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு செய்யப்பட உள்ளதாக தொழில் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க நேற்று பாராளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே பிரதி அமைச்சர் இவ்வாறு கூறினார்.

சம்பளத்தை அதிகரிப்பதில் சர்வதேச நாணய நிதியத்துக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றும் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க குறிப்பிட்டார். (அ)

# எல்லை தாண்டி மீன் பிடித்த இந்திய மீனவர் 10 பேர் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 10

காரைநகர் கோவிலான் கலங்கரை விளக்கத்துக்கு அப்பால் இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டிய ஒரு படகையும் அதிலிருந்த 10 மீனவர்களையும் கடற்படையினர் நேற்று முன் தினம் இரவு கைது செய்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட மீன்பிடிப் படகு, இந்திய மீனவர்களுடன் காங்கேசன்துறை துறைமுகத்துக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும், மேலதிக சட்ட நடவடிக்கைளுக்காக படகும், மீனவர்களும் மயிலடி கடற்றொழில் பரிசோதகரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் கடற்படையினர் தெரிவித்தனர். (அ-5)

# கூழாமுறிப்பில் துப்பாக்கிச்சூடு குடும்பஸ்தர் ஒருவர் படுகாயம்!

முல்லைத்தீவு, ஜன. 10

முல்லைத்தீவு - கூழாமுறிப்புப் பகுதியில் நேற்று முன் தினம் மாலை நடந்த துப்பாக்கிச் சூட்டில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமுற்று மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். குறித்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் குடும்பத் தகராறு காரணமாக இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. துப்பாக்கிச் சூடு நடத்திய சந்தேகநபர் தலைமறைவாகியுள்ளார். இந்நிலையில் சந்தேக நபரை கைது செய்யும் நடவடிக்கையில் ஒட்டுசுட்டான் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். குறித்த சம்பவத்தில் ஒட்டுசுட்டான் கூழாமுறிப்பினைச் சேர்ந்த 46 வயதான குடும்பஸ்தரே படுகாயமடைந்துள்ளார். 24 வயதான சந்தேக நபரே தலைமறைவாகியுள்ளார். (அ)

# தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை; 51ஆவது நினைவு தினம் இன்று யாழில்

யாழ்ப்பாணம், ஜன. 10

நான்காவது அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டின்போது படுகொலை செய்யப்பட்டவர்களின் 51ஆவது நினைவு தினம் இன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள நான்காவது அனைத்துலக தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுப் படுகொலை நினைவுத் தூபிக்கு முன்பாக முற்பகல் 10 மணிக்கு அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

யாழ்ப்பாணத்தில் 1974ஆம் ஆண்டு நடைபெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதித் தினமான ஜனவரி 10ஆம் திகதி, பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில், பதினொரு பேர் படுகொலை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# சவேந்திர சில்வாவின் அலுவலகம் மூடப்பட்டது

கொழும்பு, ஜன. 10

பாதுகாப்புப் படைகளின் முன்னாள் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வாவின் அலுவலகம் உத்தியோக பூர்வமாக மூடப்பட்டுள்ளது.

பாதுகாப்புப் படைகளின் பிரதானியாக இருந்த ஜெனரல் சவேந்திர சில்வா, கடந்த டிசெம்பர் 31ஆம் திகதியுடன் ஓய்வு பெற்றிருந்தார். பாதுகாப்புப் படைகளின் பிரதானி பதவியை முற்றாக ஒழிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கும் நிலையில், இதுவரை அப்பதவிக்கு யாரும் நியமிக்கப்படவில்லை.

இந்நிலையில் சவேந்திர சில்வா, பாதுகாப்புப் படைகளின் பிரதானியாக பணியாற்றிய காலத்தில் பயன்படுத்திய அலுவலகம் தற்போது மூடப்பட்டுள்ளது.

அங்கு பணியாற்றிய அலுவலர்கள் மற்றும் சவேந்திர சில்வாவின் பாதுகாப்புக்கு இணைக்கப்பட்டிருந்த இராணுவத்தினர் ஆகியோர் தற்போது அவரவர் பணியாற்றும் சொந்த இராணுவ படைப்பிரிவுகளுக்கு மீளத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். (அ)

# இரண்டு புதிய மேல் நீதிமன்ற நீதிபதிகள் நேற்று பதவியேற்பு!

கொழும்பு, ஜன. 10

இரண்டு புதிய மேல் நீதிமன்ற நீதிபதிகள் நேற்றுக் காலை ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க முன்னிலையில் பதவியேற்றனர்.

சட்டத்தரணி கே. எம். எஸ். திசாநாயக்க மற்றும் சட்டத்தரணி ஆர். பி. ஹெட்டியாராச்சி ஆகியோர் ஜனாதிபதி முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவும் கலந்து கொண்டார்.

# சபாநாயகருக்கு அர்ச்சுனா கடிதம்

## சபையில் இருந்து வெளிநடப்பு செய்யப்போவதாக எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 10

யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் தனது பாராளுமன்ற உரிமைகள் மீறப்பட்டுள்ளமை தொடர்பில் சபாநாயகருக்கு கடிதமொன்றை எழுதியுள்ளார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றுவதற்கான நேரத்தை பெறமுடியாமலிருப்பது குறித்த தனது ஆழ்ந்த கரிசனையை வெளியிடுவதாக அந்த கடிதத்தில் தெரிவித்துள்ள அவர், மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதி என்ற அடிப்படையில் எனது கடமைகளை நிறைவேற்றுவதற்கு இந்த உரிமை மிகவும் அவசியமானது என கூறியுள்ளார்.

உங்கள் அலுவலகம் அறிவித்தது போல இந்த விவகாரம் குறித்து ஆராய்வதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளபோதிலும் இந்த விவகாரத்துக்கு இன்னமும் தீர்வு வழங்கப்படவில்லை எனவும் அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்

இந்த நிலைமையை சரி செய்வதற்கான உடனடி நடவடிக்கைகளை சபாநாயகர் எடுக்கவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள அர்ச்சுனா, இந்த விடயத்துக்கு தீர்வு கிடைக்காத பட்சத்தில் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து பாராளுமன்றத்தின் அமர்வுகளில் இருந்து வெளிநடப்பு செய்ய தீர்மானித்துள்ளதாக கூறியுள்ளார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 10.01.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org